முப்பொருளுறவு.

(சைவசித்தாந்தத்தின்படி இறைவன்,
ஆன்மா, உடல் இவைகளின் உறவு).

"பாரதி பூதமெல்லாம் பார்க்கும்கா லப்பரத்தின்
சீராக நிற்குந் திறங் கண்டாய்—"

தாயுமானவர்.

இது
சென்னை "நியு ரிபார்மர்" பத்திராதிபரான
D. கோபாலசெட்டியாரால்
எழுதப்பட்டு,

சென்னை :
கீரந்தி-ராமஸ்வாமிசெட்டியார்
அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1921.

ப்பிரைட்.] [கிரயம் ரூ. 0-8-0.

G. R. C.—10-'21—350.

IMPORTANT NOTICE.

SIVAJNANABODHAM

OF MEIKANDA DEVA

TRANSLATED INTO ENGLISH

WITH A

New and Scientific Commentary

BY

D. GOPAUL CHETTY, Editor,
"New Reformer"

(IN PREPARATION)

முப்பொருளுறவு

(சைவசித்தாந்தத்தின்படி இறைவன்,

ஆன்மா, உடல் இவைகளின் உறவு)

அமரர் கி. அருணாசலம்
அவர்களின் நினைவாக
திருமதி A. [illegible] அருணாசலம்
(1982) சீர்காழி.

“பாரதி பூதமெல்லாம் பார்க்குங்கா[illegible]

சீராக நிற்குந் திறங் கண்டாய்—

தாயுமானவர்.

இது

சென்னை “நியூரிபார்மர்” பத்திராதிபரான்

D. கோபாலசெட்டியாரால்

எழுதப்பட்டு,

சென்னை :

கிரந்தி-ராமஸ்வாமிசெட்டியார்

அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1921.

காப்பிரைட்.] [கிரயம் ரூ. 0-12-0.

உரிமையுரை.

மண்ணிலை யகற்றி விண்ணிலை விரும்பி
தண்கருக் குழியில் வீழ்ந்து பின்னர்
அண்டமாய் புழுவாய் கூட்டு புழுவாய்
அண்டரும் வியக்கும் சுந்தர பூச்சியாய்
செட்டை பெற்றிட சுவர்க்கம் போன்று
நிட்டை யானந் தமாய்காற் றிலோடியும்
பாடியும் பூவில் ரம்மிய மதுவை
முடிக்கும் வண்ணத் திப்பூச் சிபோன்று
பந்தமாம் குறையொட் டும்பவக் கடலாம்
மந்தயிம் மேதினி யினில்வரு தலுற்று
தொந்தமா மிடங்கா லம்வரை யிலாகி
அந்தியத் தில்யா னேங்கி சோர
தம்தம் மெய்யொரு வியிச்சை ஞான
அந்தர ராகிபு மிறைவனை யணுகி
பந்தக மகற்றி யானந் தமான
எந்தன றிவுக்குகந் தவரு ளாகிய
சிந்தனை யகலா நல்மனை விக்கும்
ஏந்தல் கண்மணி குமார னுக்கும்
அந்தமில் குணக்குன் றும்மரு கனுக்கும்
சந்தமு றென்னு றயிர்போர்த் திக்கும்
இந்நூல் நல்லுரி மையுடை யதாமே.

முன்னுரை.

"ஒரும் வேதாந்தமென்றுச்சியிற்பழுத்த, ஆராவின்ப வரும் கனி பிழிந்த, சாரங்கொண்ட சைவசித்தாந்த" சாத்திரமாகிய சிவஞானபோதம் நிகர்த்தும், ஸ்வீடன் தேசத்தில் திருவருள்பெற்று அரும்பெறல் அனுபூதிமானாகிய ஸ்வீடன்பர்க் என்பவர் திருவாய்மலர்ந்தருளியதும், முதலில் லத்தின்பாடையில் இயற்றப்பட்டு, 1810வருஷத்தில் ஆங்கிலேயபாடையில் மொழி பெயர்க்கப்பட்டதுமான "ஆன்ம வுடலுறவு" எனும் முதனூலில் பன்னிரண்டு சூத்திரங்களை மட்டும் எடுத்துகொண்டு தமிழில் நிலைமண்டில ஆசிரியப்பாக்களாக பன்னிரண்டு சூத்திரங்க ளியற்றி, ஒவ்வொரு சூத்திரமும் அநேக நுட்பமான ஞானவிஷயங்கள் அடங்கி சங்கிரகமாயிருப்பினும், சிற்றறிவோனாகிய எளியேன் அவைகளை விஸ்திரித்தும் விளக்கத்தக்க பிறவிஷயங்களை எடுத்துக்கூறியும், "முப்பொருளுறவு" என நாமம்தீட்டி, இச்சார்பு நூல் செய்துள்ளேன். இந்நூலில் அடியில்கண்ட சிவபோகமெனும் பேரின்பவெள்ளம் ததும்பிகிடக்கிறது.

"அகண்டாகர சிவபோகமெனும் பேரின்பவெள்ளம், பொங்கிததும்பிப் பூரணமாய் ஏகவுருவாய்க் கிடக்குதையோ, இன்புற்றிட நாமெடுத்ததேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் சகத்திரே." தாயுமானவர்.

மேலும் அத்தாயுமானவர்கூறிய

"பாராதி பூதமெல்லாம் பார்க்கும்கா லப்பரத்தின்
சீராக நிற்குந் திறங்கண்டாய்."—

இதின் கருத்து சைவ சித்தாந்தத்தை ஒத்து எவ்வாறு இறைவன் பாராதிபூதமாயிருக்கிறார் என்பதையும் மற்ற

வைகளையும் நமது சாஸ்திரங்களில் இதுவரையில் கூறியிராத அநேக ஆச்சரியமான புது திருஷ்டாந்தங்களைக்கொண்டும் அனுபந்தங்களைகொண்டும் கரதலா மலகம்போல் இந்நூலில் யாவரு மறிதற்பொருட்டு எளியநடையில் விளக்கப்பட்டிருக்கிறது.

மேலும் பல அரும்பெறல் அனுபூதிமான்களும் சொல்லற்கரிய திரிபதார்த்த உறவை யானோ சொல்லவல்லேன். தமிழ் பாடையின்பேரிலும் தமிழ் மக்கள்பேரிலும் அடியேனுக்குள்ள அன்பை கண்டு இறைவனிட திருவருள் உண்ணின்று உணர்த்தியவாங்கு இதனை இயற்றியுள்ளேன். குற்றம் குறையிருப்பினும் பெரியோர் மன்னித்து அருள்க.

1921ஹு ஆகஸ்டுமீ 10உ
அரக்கோணம்.

D. கோபாலசெட்டி.

"[illegible]ன்றில்லை
யாருன்னை [illegible]கிற்பாரே."

திருவாசகம்.

அன்பு, ஞானம், கிரியையாக ஒரு சர்வ வியாபகமனது அதாவது முதல்வன் ஒருவருளரென்றும், அவர்தான் அறிவுக்கும், அதன் மனதுக்கும், அவயவங்களுள்ள பொருள்களுக்கும், அவைகளின் ஜீவனுக்கும், சடப்பொருள்களுக்கும் கருத்தா வென்பது திண்ணம். அப்படிப்பட்ட இறைவன் ஒருவராயினும், பதார்த்த உருவங்கள் மூவ்வகையா யிருக்கின்றன. அவை யாவன 1 தெய்வ சம்பந்த மானவை. 2 ஆன்ம சம்பந்தமானவை. 3 சடசம்பந்தமானவை. அதாவது பொருள்கள் தெய்வரூபமாகவும், ஆன்மரூபமாகவும், சட ரூபமாகவு மிருக்கின்றன. இவைகள் உருவம் மாறுபடினும் மாறு பட்டு மூன்றாயினும், பொருள் ஒன்றேயாம். இவ்விதமாய் இறைவனைப்பற்றி கூறுவதில், இறைவன், மனிதன், சடப்பொருள் முதலிய மூன்றும் நிற்க இடம் தருகிறது. இதனால் சத்தியே கடவுள் என்போரும், ஆன்மாவே கடவுள் என்போரும், சடப்பொருளே கடவுள் என்கிறவர்களும், செய்யும் வாதங்கள் அடங்குகின்றன' தெய்வீக பொருளும், ஆத்ம சம்பந்தமான பொருளும், சடப்பொருளும் ஒரே முதல்பொருளி னுருவங்கள் என்றும் நாமறியவேண்டும்.

உலோகாயுதர் சடப்பொருளாகிய ஒரு பொருள் மாத்திரம் உளதென்பார். அது சரியன்று, பதார்த்தத்தின் ஓருருவம் சடப் பொருள். பொருள் ஒன்றுமட்டு மிருந்தால் அப்பொருளுக்கு சத்தியு மிருக்கவேண்டும். வேறு ஒரு சத்தியை நூதனமாக ஏற்றப் படவேண்டியதில்லை. சடபொருளுக்கு சக்தி உண்டென்பது ஒவ்வாது- இந்த வினவிற்கு லோகாயுதர் மூவகை உத்தரம் தருவர். அவையாவன :—1. சடப்பொருளை சக்தியினின்று பிரிக்கமுடியாது. 2. சடப்பொருளும் சக்தியும் ஒரு வஸ்துதான். 3. சடப்பொரு

ளுக்கே சக்தியுளது. இவை ஒவ்வொன்றும் விவேகமற்ற கோட்பாடுகள் என்று நியமிக்க அநேக காரணங்கள் மலிந்துகிடக்கின்றன.

ஆன்மாவானது ஸ்தூல வஸ்துவல்ல. அது சடப்பொருள்களின் நியமங்களுக் குட்பட்டதுமல்ல. உலோகாயுதர் ஆன்மாவை பொருளென்பர். அவ்வாறு கூறின் ஆன்மா சடப்பொருளாகுமன்றோ? சடப்பொருளுக்கு அறிவு ஏது? ஆன்மா சிந்திக்கும் சக்தியுள்ளது. ஆகையால் ஆன்மாவும் சடப்பொருளும் தனித்தனி இருபொருளாகும். அதாவது ஒரு பொருளின் இரண்டு உருவங்களாகும். அதில் ஒன்று சடமும், மற்றொன்று சூக்ஷமமானது, சூக்ஷம சம்மந்தமுள்ளவைகள் நினைக்கும் சக்தி யமைந்தவைகள். இவ்விதம் இரு உருவமுள்ளவைகளில், சூக்ஷம உருவமுள்ளது சூக்ஷம உலகத்திற்கும், சடவுருவமுள்ளது சடலோகத்திற்கும் இன்றியமையாதவைகள். எண்ணமும் பேச்சு மிருப்பதுபோல் ஒன்று சூக்ஷம காரணமாயும் மற்றொன்று ஸ்தூலகாரியமாயு மிருக்கிறது.

சற்று முன்னோக்கி யோசித்தால், மூலப்பொருளாகிய கடவுளைப்பற்றியும் அவருக்கும் சூக்ஷம ஸ்தூல பொருள்களுக்கும் உள்ள சம்மந்தங்களைப்பற்றியும் விசாரம் செய்ய நேரிடுகிறது. ஆன்மா கடவுளாலேயே அறிவு உடையதா யிருக்கிறது. இறைவர் தன்னிடமிருந்து ஓர் நிர்வகிக்கும் சத்தி பிரவாகத்தை அனுப்புகிறார். அது அவரிடமிருந்து புறப்பட்டாலும் அவரே யாகாது. ஆனால் அவ்விறைவனிட ஒருருவம் தான் அவரிடமிருந்து வெளிப்படுகிறது. இதற்கு அநேக உதாரணங்கள் சிருஷ்டியிலேயே யிருக்கின்றன. ஆதித்தன் தன்னிடத்திலிருந்தும், ஆகையால் அவனிட பொருளில் உருவங்களாகியும், அவ்வாதித்த ஜாதகதுமான, சூடு, ஒளி, சக்தி அல்லது திராணி இவைகளடங்கிய காந்த மண்டலமென்றும், (Magnetic Sphere), ஆகாசமண்டலமென்றும், (Etheric Sphere) இவைகளை வெளிப்படுத்துகிறார். மனிதனிடமிருந்து, மனது, சரீரமாகிய மண்டலங்கள் புறப்பட்டு ஒவ்வொரு மனிதனைச் சுற்றிலும் மானசிகமானதும் ஸ்தூல சம்மந்தமுமான வெளிப் பிரவாகங்களை உற்பத்திசெய்து அவனுடன் நேற்படும் ஒவ்வொருவரையும் திருப்தியாகவோ வேறுவிதமாகவோ மாறுதல்செய்து சுகமோ அசுகமோ உண்டாக்குகின்றன.

அவ்வகை நூதன மண்டலங்கள் சூரியனே, மனிதனே, மிருகமோ, ஏதோ, எது அனுப்புகிறதோ அதனிடமிருந்து வருகிறது. ஆனல் அவ்வகை புதுமண்டலங்கள் அந்தப் பொருள்களின் உயிருமல்ல அந்தப்பொருளும் அல்ல. அவ்விரண்டின் உருவங்களாகும்.

இறைவனிடமிருந்து சூக்கும் மண்டலங்களுண்டாகின்றன. இம்மண்டலங்கள் இறைவனுகாது. மனிதனும் மேல்கூறியபடி புதுப்பெருக்குகளை வெளிப்படுத்தலாம். கடவுளின் பெருக்குக்கும் மானிட பெருக்குக்குமுள்ள வித்தியாசம் யாதெனின், கடவுள் பெருக்கு சிருஷ்டிக்கும். மானிட பெருக்கு சிருஷ்டிக்க முடியாது. ஆனல் அப்பெருக்கை கையாடி வேறு ஒன்றுக்கு அனுப்பக்கூடும்.

தெய்வ பதார்த்தத்தினின்று வெளிபடும் இம்மண்டலங்கள் எப்படி சூக்கும தூலபொருள்களை உற்பத்தி செய்கின்றன? இறைவன், மனிதனில் இச்சை ஞானக்கிரியை யாகிறர் என்று முன்னரே கூறினேம். இறைவனிடமிருந்து மண்டலங்கள் புறப்படுகிறபடியினல் இறைவனிடமிருக்கும் இச்சா ஞானக்கிரியை இம்மூன்றும் சூக்குமதூல உலகங்கள் தோன்றுவதற்கு காரணமாகின்றன. இவைகள் மூன்றும் கடவுளின் மூலாதாரமான அருள் மண்டலமாகவும், ஞானமண்டலமாகவும் சக்திமண்டலம் அல்லது உபயோக மண்டலமாகவும் வெளிப்படுகின்றன.

உற்பத்தி யாகவேண்டிய உருவங்கள் சூக்குமமாகவும் தூலமாகவு மிருப்பதால், இம்மாதிரி வெளியாகும் மண்டலங்கள் கீழ் நோக்கி ஒவ்வொன்றிலும் மூன்ருகிறது. ஒவ்வொன்றும் கடவுளின் மூலாதாரத்தின் முறைப்படி உருவாகிற மூன்று சூக்குமம் அன்பு-ஞானம்-உபயோகம் இவைகளின்படிகள்; மூன்றுதூலங்கள்-காந்தமண்டலம், ஆகாசமண்டலம், வாயுமண்டலம் அல்லது சடப்பொருள் மண்டலம். இவைகளில் மேல்கூறிய மூன்றின் கடைசியான பிரதிமைகள். கடவுள் முதலில் சூக்கும மண்டலங்களை உற்பத்திசெய்து பின்னர் சூக்கும மண்டலம் மூலமாய் சடமண்டலத்தை உற்பத்திசெய்கிறர்.

கீழ்நோக்கியேபார்த்தால் மூன்று சூக்குமமும் மூன்று தூலத்துடன் ஒத்திருக்கிறது. அன்பு, ஞானம், உபயோகம் இந்த மூன்று மண்டலங்களும் சடப்பொருள் மண்டலங்களாகிய காந்தமண்டலம் ஆகாசமண்டலம் வாயுமண்டலங்களுக்கு ஒத்திருக்கின்றன. மூன்று சூக்குமபடிகள் ஒன்றாய்சேர்ந்தால் கீழ் இறக்கத்தில் மூன்று சடப்பொருள் படிகளுக்கு ஏறக்குறைய காரணமா யிருக்கின்றன. சடப்பொருள்களின் படிகளின் பதார்த்தங்கள் தூல உலகத்திலிருக்கிறமாதிரி சூக்கும உலகத்தில் சூக்குமபடிகளின் பதார்த்தம் இருக்கிறது. அதாவது கடவுளின் சத்தியிலிருந்து பதார்த்த உருவங்கள் வெளி அனுப்ப காரணமாயிருப்பதால் அந்த வஸ்துவே சூக்கும தூல உருவத்தில் முறையே யிருக்கிறது.

இவ்விரண்டின் சம்பந்தத்தை எண்ணத்துக்கும் பேச்சுக்கும் ஒப்பிடலாம். எண்ணம் பேச்சுக்கு எம்மாதிரி சம்மந்தப்பட்டிருக்கிறதோ அம்மாதிரியே சூக்குமவஸ்து தூலவஸ்துவுக்கு சம்மந்தப்பட்டு இருக்கிறது. அவைகள் ஒன்றைப்போல் ஒன்றில்லை. ஆயினும் அவைகள் ஒரு வஸ்துவேதான். பார்ப்பதற்கு இருவித உருவங்களாக இருக்கின்றன. சூக்குமமாகிய எண்ணம், தூலமாகிய பேச்சாக முடிகிறது. அவைகள் சம்மந்தமென்ன? ஒற்றுமையாம். அதாவது சூக்கும உலகத்தில் எண்ணமும், சூக்கும பொருள்களின் உருவங்களும், சூக்கும பொருள்களு மிருப்பதுபோல் பேச்சும் இதர சடவஸ்துக்களும், தூல உலகத்திலிருக்கின்றன. எண்ணம் போன்ற ஓர் சூக்குமபொருள் சடப்பொருளில் பிரவேசிக்க காரணமாயிருப்பதாலும், பேச்சானது, மற்ற சடப்பொருள் உருவங்களைப் போல், சூக்கும உலகத்தில் எண்ணம் இன்னும் மற்றவைகளைப் போல சட உலகத்தில், எண்ணத்திற்கு ஒத்திருப்பதாலும் அவைகள் இரண்டும் வித்தியாசப்பட்டு ஒரு பொருளாம். பேச்சு எண்ணமாகாது. தூலம சூக்குமமாகாது. ஆனல் அவைகள் தூலலோகத்தில் சூக்கும பொருள்களின் தூல பிரதிமைகளாகின்றன. எண்ணத்திலும் பேச்சிலும்போல சூக்குமபொருள் ஸ்தூலபொருளாகிற ஓரியற்கை வழி உண்டு. கீழ்மட்டங்களில் ஒரு பொருளின் இந்த சூக்குமதூல உருவங்களுக்குள்ள இணக்கம் அல்லது வித்தியாசத்திலாவது மேல்கூறிய சடவழி பிரவேசிக்கிறதில்லை. அவைகள்

எவ்விதத்திலாயினும் நிலைநிற்கும். சூக்குமபடிகள் தூலபடிகளை தாழ்மையான உபயோகம் அல்லது சக்தியில், அல்லது அவைகளின் மூலமாய், உற்பத்திசெய்ய ஒன்றாக தொழில் செய்கின்றன.

தூலபடிகளாகிய காந்தம், ஆகாசம், வாயுவு, மண்டலங்களை யோசித்தால் உற்பத்தி விவரம் நன்றாக விளங்கும். இவைகள் எப்படி உண்டாகின்றன? சிருஷ்டியி லிருப்பதுபோல் வரிசைக்கிரமமாக, சூக்குமபொருள்கள் ஒன்று சேர்ந்து தொழில் செய்வதால் உண்டாகின்றன. சூக்கும பொருள்களாகிய உணர்வு, எண்ணம், திராணி, இவைகள் தூலலோகத்தில் சரீரத்தின் மூலமாய் பேச்சு அல்லது செய்கையை உற்பத்திசெய்ய ஒன்றுசேர்ந்து நடப்பது போலும். அது காரணகாரிய பொருள்களாக அதாவது இணக்க சித்தாந்தத்தை அனுசரித்திருக்கிறது.

ஆயினும் ஒன்றிலிருந்து மற்ற ஒரு தூல மண்டலம் உற்பத்தியாவதைமட்டும் கவனித்தால், ஒவ்வொன்றும் மத்தியிலிருந்து சுற்றளவுக்கு பரவும்போது சக்திகுறைவும், நிதானபரவுதலும், அதிக ஒடுக்கமும், அதனால் பதார்த்தங்கள் புது ஸ்திதிக்கு கொண்டுவர தயார்செய்யப்பட்ட தன்னியமின்மை, அதாவது சலனமின்மையும், அதாவது பாகங்கள் அல்லது அணுக்கள் மறுபடியும் சேர்தலும், பின்னிட்டு தாழ்ந்த பொருள் உற்பத்தியாகுதலும் பார்க்கிறோம். இம்மாதிரியாக காந்தமண்டலம் அமுக்கப்பட்டும், கட்டியாக இறுக செய்யப்பட்டும், தகுந்தபடி சலனமில்லாமலு மாகிறது. அவ்விதம் அமுக்கப்பட்ட ஸ்திதியில், கலப்பினால் ஆகாசமண்டல முண்டாகிறது. இதுவும், கடைசியில் ஓர் மண்டலமாக இருக்காமல் சலனமற்ற ஒரு பொருளாக அம்மாதிரியே கட்டியாக இறுகப்பட்டு, உலகத்தில் உள்ள ஜடப்பொருள்போல் ஓரிடத்தில் நிருத்தப்படுகிறது. ஆனால் முதலில் வாயுவு வடிவத்திலிருந்து பின்னர் இம்மாதிரி யாகிறது.

இவ்விதமாகத்தான் பிரபஞ்சத்தின் மூலபொருள் இறுகப்பட்டு கட்டியான சலன மற்றவஸ்துவாகி, ஜீவசூக்கும மண்டலத்தை ஏற்றுக்கொள்ளும் கிரமமான நிர்மானமாய், கொஞ்சம் கொஞ்சமாக விருத்தியாகி, உற்பத்தி ஸ்தானத்துக்கு அறிவுடன்போய் சேரு

கிறது. மேல்கூறிய ஆறுமண்டலங்களும் அமிசரமானதும், மூல மானதும், சர்வவியாபகமானதுமா யிருக்கின்றன.' அவைகள் சூரியனும் பூமிகளும் உற்பத்திமுதல் உயர்ந்த உயிருள்ள வஸ்துக்கள் தோன்றுகிறவரையில் அந்தந்த மண்டலங்கள் அல்லது படிகளுக்கு தக்கபடி எல்லா உருவங்களும் உண்டாகிற இடைநிற்கும் பொருள்களாயிருக்கின்றன.

ஆனால் உயிர் உண்டாக கிரமமான நிர்மானங்கள் வேண்டும், அவ்விரண்டும் ஒன்றாகவே அகப்படுகின்றன. காரணம் என்னவென்றால் உயிர் உட்பிரவேசமானதால் என்க. அது கடவுளிடமிருந்து இவ்விதமுண்டான எல்லா இந்த மண்டலங்களுக்கும், எல்லாவற்றின் மூலமாய் தாழ்ந்ததற்கும் கூட உள்பெருக்கு. உயிர் ஆரம்பிக்கக்கூடிய ஸ்தூலத்தில் சடவஸ்து உண்டாகி, அவயவத்தின் உருவத்தின்படியும் அதின் அடையும் சக்திபடிக்கும் தக்கவிதமாய் கடவுளிடமிருந்து உயிர் பிரவாகிக்க கிரமமான நிர்மானங்கள் உண்டாக்கப்படுகின்றன. இம்மண்டலங்கள் கடவுளிடமிருந்து உற்பத்தியானாலும் கடவுளாகா. அவைகள் அப்பொருளின் உருவம் அமைப்பதில் உண்டாகும் எந்தபொருள் உருவமும் கடவுளாகா. இந்த நிலையான மண்டலங்களில் உட்பிரவேசிக்கும் உயிர் கடவுளின் உயிர் அல்ல. ஆனால் அது அதை ஏற்றுக்கொள்ள செய்யப்பட்ட நிர்மானத்துக்கு தக்கபடி, அதிலிருந்துவந்த சக்தி அல்லது திராணி.

இன்னவிதமாக சராசர பிரபஞ்சத்தின் பொருள் மூன்றுபடிகளும் ஒரு மூலாதாரமான வஸ்துவின் மூன்று உருவங்கள். சூக்கும தூலபொருள்கள் கடவுளிடமிருந்து உண்டாகிறதும் அவருடன் நிலையாகவும் உயிருள்ள சம்மந்தமுள்ளதுமான பொருள் உருவங்கள்.

அருள் ஞான சொரூப மயம்

முப்பொருளுறவு

காப்பு.

முப்பொருள் நண்ணுற வுவீதென விளம்ப
அப்பொருளறியா 'பானியற் றமிழ்நூல்
ஞானக் காந்தி வெல்லப் பேரருள்
ஞான சொரூபன் றுள்பற் றுவேனே.

நூல்.

1. ஓடும் சூட்சம் சூக்கும உலகு
கூடும் தூலம் தூலப் பூமி
முன்னதில் சூக்கும சரீரர் தேவர்
பின்னதில் நம்மாந் தர்வாழ் வாரே.

2. ஆதி தோற்றம் சூக்கும உலகு
ஆதி யாலது வென்று முய்யும்
ஓதின் தூலந் தன்னிர வியாலாமே.

3. சூக்கும வுலகின் பானு அதனிடை
நூக்கிய அறன்றன் நிர்மல வன்பே.

4- சூடும் சுடரும் அப்பரி தியினின்
றோடும் சூட்டின் சத்து அன்பு
நீடு மச்சுடர் தெருட்சி யாமே.

5. மாந்தரிற் பெருக்கு மச்சூடுஞ் சுடரும்
காந்தி சித்தத்தி லேகி யன்பின்
நலமும் பிரபை யுத்தியிற் படிந்து
புலத்தின் மெய்யுந் தோன்றல் செய்யுமே.

6. பதியில் சூடும் சுடரும் தோன்றி
குதிக்கும் மானிட னுன்மா விற்கூடி,
இதிலிருந் தவன்மன துணர்வு நினைவிலும்,
நுதியில் ஐம்புலன் சொற்றொழி லிலேகுமே.

7. தூல் லோக சோதி நீயே
தூல லோக மாதியிற் றோன்றி
தூல பாற்கர னுதவியால் நிலைக்குமே.

8. ஆகவே பரிதியின் விளைவெல் லாநற்
றாகவே நோக்கில் ஜீவ னற்றதே.

9. மாந்தர் உடுப்பினை யுடுத்தல் போன்று
தரிக்கும் சூக்கும பொருள்ஜடப் பொருளையே.

10. ஈண்டு மானிட னுடையாம் சூக்குமம்
தூண்டும் நீதியு மறிவு மவனில்
ஆண்டு சூக்கும சடமா குவானே.

11. இச்சை ஞானத் தன்மை யொக்கும்
அவ்வெள் ளத்தின் யுக்த வேற்பே.

12. மானிட ரறிவு தன்பயிர்ச் சியொத்து
பொன்னாட் டின்ஒளி யுயர்ஞா னமாக்கலாம்
அன்னதே கரும மொத்து சித்தம்
பொன்னாட் டின்சூ டாமன் பாகுமே
ஆயினு மறிவின் நல்ஞா னமொத்து
மனங்கொள் செய்கை யில்லை யாயின்
அன்பாய் சித்தம் ஏற்ற லுராதே.

அருள் ஞான சொரூப மயம்

முப்பொருளுறவு

காப்பு.

முப்பொருள் நுண்ணுற வுவீதென விளம்ப
அப்பொரு ளறியா யானியற் றுமிந்நூல்
ஞானக் காந்தி வெல்லப் பேரருள்
ஞான சொரூபன் றாள்பற் றுவேனே.

வசனம்.

இறைவன், ஆன்மா, உடல் இம்மூன்று பொருள்களின் உறவு இத்தன்மையதென உலகத்தாருக்கு தெரிவிக்கும்பொருட்டு அந்த பதார்த்தங்கள் மூன்றையும் அறியாத நான் செய்யும் இந்நூலானது பேரருளும் ஞானமும் உருவமாகயுடைய இறைவனிட ஞானமாகிய வெளிச்சம் அடைய அம்முதல்வன் பாதங்களை பற்றுகின்றேன்.

விளக்கம்.

பேரருள் ஞான சொரூபன்.

அன்பு மனிதன் உயிர். முதல்வன் உயிராயிருத்தலால் அவரை அன்பு எனப்படுகிறது. திருமூலர், "அன்பே சிவமாவதாரு மறிந்திலர்" என்றார். தேவர்களும மனிதர்களும் உயிரை யடையப்பட்டவர்கள். கடவுள் உயிரைக்கொடுப்பவர். அவர் முதல் திதியும் பிரத்தியட்சமாவதும் ஒன்றேதான். அவரிடத்தில் அபாரமான வஸ்துக்கள் எல்லாம் ஒன்றே. எல்லாப்பொருள்களும் இறைவனிடமிருந்தே தோன்றுகின்றன. அவரிட சத்து அல்லது சாரம் அன்பும் ஞானமுமாம். தெய்வ அன்பு தெய்வ ஞானத்துக்கு சேர்ந்தது. தெய்வ ஞானம் தெய்வ அன்புக்கு சேர்ந்தது. தெய்வ அன்பும் தெய்வ ஞானமும் பொருள்களும் உருவங்களுமா யிருக்கின்றன.

ஞானமும் அன்பும் பதார்த்தங்கள் என்றும் உருவங்கள் என்றும் மனிதர்கள் அறிகிறதில்லை. அவ்வறிவு முன்னொருகாலத்தில் மானிடரிலிருந்ததாக தெரிகிறது. ஆயினும் உலகம அதை இப்பொழுது மறந்திருக்கிறது. ஒவ்வொரு மனிதனிடமும் சப்தம், ஸ்பரிசம, ரூபம், ரசம், கந்தம் என்கிற ஐந்து தன்மாத்திரைகள்

உள. ஸ்பரிசத்தின் பதார்த்தம் சருமம். அச்சருமத்தின் பொருளுமுருவமும் அதன்மேல் படுகிற பொருள்களை உணருகிறது. ஸ்பரிசயறிவுதொடும் பொருள் அல்லாமல் பதார்த்தமாகிய சருமத்தின் பொருளிலும் உருவத்திலுமிருக்கிறது. இந்த அறிவு தொடப்பட்ட வஸ்துக்களால் பதார்த்தமானது மாறுதலடைந்த ஒன்று. மற்ற தன்மாத்திரைகளும் இம்மாதிரியே. இதனால் என்ன யேற்படுகிறது எனின்-பொருளுருவம் இவ்விரண்டின் மாறுதலாலுண்டாகும் இந்திரிய ஞானம் பதார்த்தத்தினின்று வேறு அல்ல. ஆனால் பதார்த்தத்தில் ஓர் மாறுதல் செய்கிறது. முன்போலவும் பின்னிட்டும் முன்னிருந்த பதார்த்தமாகவே யிருக்கிறது. ஆகையால் மேற்கூறிய தன்மாத்திரைகள் தங்கள் அவயவங்களிலிருந்து புறப்படும் ஓர் ஆவிபோன்ற பொருள்கள் அல்லவென்றும், பொருள் உருவங்களில் அவைகள் அவயவங்கள் என்றும், அவயத்தின் மாறுதலினால் இந்திரிய ஞானம் உண்டாகிறது என்றும் ஏற்படுகிறது. அவ்விதமாகவே இறைவன் அன்பும் ஞானமும். ஆனால் ஓர் வித்தியாசமுண்டு. அன்பும் ஞானமுமாய் இருக்கும் பொருள்களும் உருவங்களும், வெளி இந்திரிய அவயவங்களைப்போல், பார்க்கமுடியாது. ஆயினும் அன்பு ஞானம் இவைகளுக்கு சம்மந்தப்பட்ட எண்ணங்கள் முதலியவைகள் பொருள்கள் என்றும் உருவங்கள் என்றும் கூறுவதை மறுக்கமுடியாது. அவைகள் ஆவியாய் போகப்பட்டதுமல்ல, உற்பத்தி யாகாததுமல்ல. பதார்த்தங்களாகிய ஒரு உண்மையான பொருள் உருவத்தினுடன் சம்மந்தப்படாததுமல்ல. மூளையிலே சித்தத்திற்கும் அறிவிற்கும் சம்மந்தப்பட்ட ஒவ்வொரு உட்புலனும் இருக்க, கணக்கற்ற பொருள்களும் உருவங்களு மிருக்கின்றன. எல்லா அன்புகளும், உணர்ச்சிகளும், எண்ணங்களும் மேற்சொல்லிய பொருள்களிலிருந்து உற்பத்தியான ஆவிகள் அல்ல. ஆனால் அவைகளே உண்மையாக தங்களிடமிருந்து ஒன்றும் வெளிப்படுத்தாத பதார்த்தங்களாம். மேல், புறப்புலங்களைப் பற்றி சொல்லியதிலிருந்து தாங்கள் மாறுதலடையப்பெற்ற திரைகள் அல்லது திரைபோல் அசைதலுக்கு தக்கபடி அவைகள் மாறுதலடைகின்றன என்பது ஏற்படுகிறது. இதனால் இறைவனிட அன்பும் ஞானமும் பொருளும் உருவமா யிருக்கின்றன என்றாகிறது. அவைகள் முறையே இறைவனிட திதியும் பிரத்தியட்சமு மாகின்றன. பொருளும் உருவமுமாக அவைகள் இருத்தல்போல் அப்படிப்பட்ட திதியும் பிரத்தியட்சமுமாக அவைகள் இல்லாவிட்டால் ஒன்றுமில்லாத மனக்கற்பனைகளாகும்.

நூல்.

1. ஓடும் சூட்சம் சூக்கும உலகு
கூடும் தூலம் தூலப் பூமி
முன்னதில் சூக்கும சரீரர் தேவர்
பின்னதில் நம்மாக் தர்வாழ் வாரே.

வசனம்.

சூக்கும உலகம் ஆவிபோன்று ஓடப்பட்ட சூக்குமமானது. (இதற்கு பொன்னுடு என்று பெயர்). சடமாகிய இப்பிரபஞ்சம் பல பதார்த்சங்கள்கூடப் பெற்றமைந்த சடப்பொருள். இதற்கு மண்ணுலகு என்று பெயர். முன்சொன்னதில் சூக்கும சரீரமுடையவர்களும் தேவர்களும், பின்சொன்னதில் நம்மானிடர்களு முளர்.

விளக்கம்.

(1) மானிடராகிய நாம் சடப்பொருளாகிய மண்ணுலகில் ஸ்தூலசரீரத்தில் வசிக்கின்றோம். அது நாம் பார்த்து அறியுமுலகு. அதினுல்தான் நம் தேகங்கள் செய்யப்படுகின்றன. சடப்பொருள் என்பது என்ன? இதற்கு இருவிதவிடைகள் அளிக்கப்படுகின்றன. ஸ்தூல பிரபஞ்சம் உண்மையானதென்றும் பொய்யானதென்றும் இருவகையினவென்று சொல்லுகிறார்கள். இவ்விருவகையும் நீக்கி அடியில்குறித்த மறுமொழி ஒன்றுண்டு. இறைவன் தன்னிடத்திலிருந்தும், தன்னிடமிருந்து வந்த பொருள்களாலும் சராசர பிரபஞ்சங்களை சிருஷ்டிக்கிறார் என்பதாம். அப்படி அவரிடமிருந்து புறப்பட்ட பிரவாகம் ஒரு பதார்த்தமாகும். அப்பதார்த்தத்தில் அது இருக்கும்வகையை நாம் நினைக்கமுடியாது. மனதானது ஐம்புலன்கள்மூலமாய் நினைத்து நமக்கு காட்டும் உருவம் மட்டும் தெரியும். மற்றவை தெரியாது. அது நமக்கு தேவையானவைகளுக்கு தகுதியாகவும் ஐம்புலன்களுக்கு சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த பதார்த்தம் ஜடப்பொருளாகும் கால் ஐம்புலன்கள் மூலமாய் மனதை பிரவர்த்தித்து சர்வ லோகங்களிலுள்ள வடிவங்களையும் தோற்றங்களையும் காண்பிக்கிறது. நாம்

சிறுகுழந்தையா யிருந்ததுமுதல் கொஞ்சம் கொஞ்சமாக சலனம், தூரம், இடம், உருவம் முதலியவைகள் இன்னவையென்று தெரிந்து பிரத்தியட்சமான பொருள்களைப்பற்றி சில முடிவுகளுக்கு வருகிறோம். அதை நாம் சந்தேகிக்கிறதுமில்லை. ஐம்புலன்கள் நமது மனதுக்கு பதார்த்தங்களை பார்த்த உடன் சில பாவனைகள் உண்டாக தகுதியாயிருப்பதாலும், நம் ஐம்புலன்கள் மூலமாய் அந்த பதார்த்தம் அந்தப்பாவனைகளை உண்டாக்க சுத்த மூலப்பொருளுக்கு தகுந்தபடி ஒழுங்கு படுத்தப்பட்டிருப்பதாலும் நாம் அறிகிறோம். இவ்விதத்தில்தான் பூலோகம் பற்பலவித பதார்த்தங்களுடன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இந்த அபிப்பிராயம் மேல்குறித்த இருவகை அபிப்பிராயங்களை சாந்தப்படுத்துகிறது. ஒரு நிஜமான வியாத்தியாகிய சுத்த மூலபதார்த்தம் எல்லா ஜடப்பொருள்களிலுமிருந்தும் அவைகளை நிலைநிருத்துதலினுல் ஸ்தூல பிரபஞ்சம நிஜமானதே. இந்த மூலபதார்த்தம் நம்ம ஐம்புலன்களுக்கும், நம்ம ஐம்புலன்கள் நமது மனதுக்கும், தகுதியாக ஒழுங்கு படுத்தப்பட்டிருப்பதால், இந்த உருவங்கள் எல்லாவற்றுடன், அதனுள் தொழில் செய்கிற எல்லா சக்திகளும் இவைகள் ஏதோ அவைகள் என்று நமக்கு தெரிவிக்கிறதினுல் ஸ்தூல பிரபஞ்சம் மெய்யன்ரும். மேலும் நம்மைத் தவிர உண்மையான பொருள் ஒன்று இருப்பதாலும் இந்த பொருள் பிரகிருதியில் அல்லாமல் பிரகிருதியா யிருப்பதாலும், அல்லது நாம் சிருஷ்டியில் உள்ள பொருள்களைப்பற்றி நினைப்பதெல்லாம் அதின்பேரில் இயற்கை அஸ்திவாரமாக யிருப்பதாலும் சடலோகம் நிஜமே. அதன் ஐம்புலன்கள் சம்பந்தத்தினுலும் அவைகளிட மனதின் சம்மந்தத்தினுலும், இந்த மூலபொருள் எல்லாவித இயற்கையான உருவங்களாகும், சக்திகளாகவும் காண்பிக்கிறபடியினுலும், இந்த மூலப்பொருளுக்கு உருவமும் சக்தியும் பிரத்தியட்சமும் இருக்கும் காரணம்கொண்டு அது பொய்யேயாம்.

நம்மிட ஸ்தூல சரீரத்தில் சூக்கும சரீரமிருக்கிறது. இந்த சூக்கும சரீரம் ஸ்தூல சரீரத்தை நிரம்ப அதற்கு உயிரைக்கொடுக்கிறது. சூக்ஷ்மசரீரமில்லாமல் தூலசரீரம் இறந்ததேயாம். சூக்ஷ்ம கண்கள், காதுகள், ஸ்தூலகண்கள் காதுகள் மூலமாய் பார்க்கிறதும் கேட்கிறதுமா யிருக்கிறது. அதாவது ஸ்தூல சரீரத்திலிருக்கும்

போது ஆன்மாவானது அந்த சரீரத்துக்கு உயிர் கொடுத்து அதன் மூலமாய் ஜடப்பொருள்களை பார்க்கிறது. நாம் இறந்தபிறகு நம்மிட ஸ்தூலகண், காது முதலியவை செவ்வையாயிருந்தும் பார்க்கிறதில்லை கேட்கிறதில்லை. சூக்குமசரீரம் போய்விட்டபடியினால் அம்மாதிரியாய்விடுகிறது. அதைத்தான் இறத்தல் என்று சொல்லுவது. இறந்தபிறகு சூக்கும சரீரத்தை எடுக்கிறோம். அதற்கும் ஸ்தூல சரீரத்தைப்போல் அவயவங்களும் ஐம்புலன்களும் இருக்கின்றன. அவைகள் எல்லாம் சூக்கும சரீரத்துக்கு இல்லாவிட்டால் நம்ம ஸ்தூல சரீரம் பிழைக்கமாட்டாது. சூக்கும சரீரத்துக்கு ஓர் வெளி உலகம் வேண்டுமே என்கிற ஒரு ஆசங்கை யுண்டாகிறது. இவ்வுலகிலிருக்கிறபடி அல்வுலகிலும் உண்டு. மனமானது இவ்விடத்திலிருந்தமாதிரி ஐம்புலன்கள் மூலமாய் சூக்ஷ்ம உலகத்தைப்பார்க்கிறது. ஆனால் அந்த ஐம்புலன்கள் சூக்ஷ்மயானது. இவ்வுலகத்திற்கும் அவ்வுலகத்திற்கும் வித்தியாசமுண்டு. இந்த மண்ணுலகின் போராட்டத்தால் தயார்செய்யப்பட்ட இடமாகையால் இவ்வுலகப்பொருள்கள் நம்மை விரோதிக்கிறது. அவைகள் நமது கோரிக்கைப்படி நடத்தலும் நன்று அன்று. அவைகளை எதிர்த்து நடந்தால் நாம் புத்திமான்களாவோம். ஜடப்பொருள்கள் நம்மை நம்ம இஷ்டப்படி செய்யவிடுகிறதில்லை. அப்படிவிட்டால் நாம் அதிக பாவங்களைச் செய்துவிடுவோம். இந்த உலகத்தில் நாம் நம்மிட செயல்களை புண்ணியம் நிறைந்ததாகசெய்து பின்னிட்டு அவ்வுலகத்திற்கு போக தயார் செய்யும்படியான இடம். அந்த உலகத்தில் தயார் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. இவ்வுலகத்தில் செய்த பயனையும் முடிவையும் அவ்வுலகத்தி லடைகிறோம். அவ்வுலகத்தில் சடப்பொருள் விரோதமில்லை. அங்கே சடப்பொருளுமில்லை. சூக்கும பதார்த்தங்கள் இழுக்கமுடியாததும் கடினமுள்ளதும் எதிர்ப்பதுமான உருவங்களால் உடுக்கப்படுகிறதில்லை. அது சூக்ஷ்ம பதார்த்தமாகவே யிருக்கும். அவ்வுலகத்தில் எல்லா பொருள்களும் அறிவும் சித்தமும் கோரியபடி நடக்கும். இவ்வுலகத்தில் சித்தம் ஒருவழி, அறிவு ஓர்வழியாய் போகும்.

(2) மனிதனிடத்தில் ஓர் ஆன்மாவாகிய சூக்ஷ்மவஸ்து யிருப்பதாயும் அது ஸ்தூல சரீரத்தை இழந்தபிறகு சூக்ஷ்மசரீரத்தை யடை

வதாயும், அது அழியாததென்றும் அம்மாதிரி சூக்ஷ்ம சரீரமுடைய ஆன்மாக்கள் சேர்ந்த இடம் சூக்கும உலகாகிறது என்றும் இன்னும் இவ்விதமான பல விஷயங்கள் விவரப்படவேண்டும். அவைகள் ஆங்காங்கு எடுத்து காட்டப்படும்.

(3) இந்துக்களாகிய நம் கொள்கைபடி பரலோகம் இருவகைத்து. அதாவது பதமுக்தி என்றும் பரமுக்தி என்றும். பதமுக்தி ஆன்மாக்கள் தாங்கள்செய்த புண்ணியத்துக்காக கிடைக்குமிடம். பரமுக்தி ஓர் இடமல்ல. ஸ்தூலவடிவத்துடன் சுகம் அனுபவிக்குமிடமல்ல. சூக்குமமாக பலன் அனுபவிக்குமிடம். இது என்றுமுளது. அதற்கு ஸ்தூலசம்மந்தம் ஒன்றுமில்லை. பதமுக்தி காயமற்றது. ஆன்மாக்களிட செய்கைகள் பலவிதமானபடியினால் அவைகள் பலன்களும் பலவிதம். ஆகையால் பதமுத்தி பலவிதமுண்டு. அவைகளில் அனுபவிக்கும் சுவர்க்கம். அல்லது ஆனந்தம், சாலோகம், (அதே சுவர்க்கத்திலிருத்தல்), சாமிப்பம் (கடவுள் சந்நிதியிலிருத்தல்), சாரூபம் (கடவுளிட ரூபமெடுத்தல்), சாயுஜ்ஜியம், (கடவுளுடன்கலத்தல்) என்கிற நால்வகையானவை. இவைகள் எல்லாம் பரமுக்தியாகிய நிஜசுவர்க்கத்தை அடைவதற்கு வழிகளாகும்.

---

2. ஆதி தோற்றம் சூக்கும உலகு
ஆதி யாலது வென்று முய்யும்
ஓதின் தூலந் தன்னிர வியாலாமே.

வசனம்.

சூக்கும உலகமானது முதலில் தோன்றியது. அதினுடைய ஆதித்தனால் அது எப்பொழுதும் பிழைக்கும். வாசித்தால் ஸ்தூல உலகமாகிய இவ்வுலகம் தன்னிட சூரியனால் பிழைக்கும் என்பது தெரியும்.

விளக்கம்.

விண்ணுலகும் மண்ணுலகும் வெவ்வேறு உலகங்களானபடியினால் முன்சொன்னதற்கு ஒரு சூரியனும் பின்கூறியதற்கு ஒரு சூரி

யனும் வேண்டும். இவ்வுலகின் சூரியன் சடப்பொருளை உற்பத்தி செய்பவன், சூக்குமபொருளை உற்பத்திசெய்யமுடியாது. நம்ம சூரியன் சூக்குமபொருளை உற்பத்திசெய்வானாகில் சடப்பிரவாகம் ஏற்படும். அது வழு என்று முன்னமே சொன்னோம். இந்த உலகம் சூரியனிடத்து உண்டானதென்பதும், உலகத்திலிருந்து சூரியன் உண்டாகவில்லை யென்பதும், இவ்வுலகம் சூரியனால் ஜீவிப்பதால் ஏற்படுகிறது. நம்ம சூரியன் நீக்கப்பட்டால் உலகம் அழிந்துபோகும். அவ்விதமாகவே பரலோக சூரியன் இல்லாவிட்டால் அந்த லோகம் நில்லாது. அதுவும் அழிந்துபோகும். பரலோக சூரியனுக்கு உதயம் அத்தமனம் என்பது கிடையாது. எப்பொழுதும் ஒரு மாதிரியாகவே இருக்கும். சூக்குமலோக சூரியனைப் பற்றி ஒன்றும் தெரியாதவனுக்கு உலகசிருஷ்டி விளங்காது. அவன் எப்பொருளும் பிரகுருதியிலிருந்து உண்டானதாகவே நினைப்பான். சூக்கும பிரவாக உற்பத்தி தெரிந்தால் ஒழிய அது இன்னதென்று அவன் அறியமாட்டான். ஒவ்வொரு பிரவாகமும் தன்னிட சூரியனிடமிருந்து உண்டாகிறது. சூக்கும பிரவாகம் அதின் சூரியனிடமும் சடப்பிரவாகம் அதின சூரியனிடமுமிருந்து புறப்படுகிறது. ஸ்தூல சரீரத்தின் புறத்தோற்றம், ஸ்தூல உலகு சூரியனிடமிருந்து பிரவாகத்தை அடைகிறது. மனிதனிடம் அதின் அகத்தோற்றம் சூக்கும சூரியனிடமிருந்து பிரவாகத்தை அடைகிறது, கிரியை நடத்தும்கால் ஆன்மா சரீரத்துடன் சேர்தல்போல் அவைகள் ஒன்று படுகிறது.

(2) சூரியனுக்கு சடப்பொருள்களை உற்பத்திசெய்யும் சக்தியிருப்பதால் பூர்வீகத்தில் ஆசியாகண்டத்தில் நெருப்பை அக்னி பகவானாக வணங்கிவந்தார்கள். அமெரிக்காகண்டத்திலும் பூர்வீக ஜனங்கள் சூரியனை வணங்கிவந்தார்கள். தற்காலத்திலும் இந்து தேசத்தில் சூரிய நமஸ்காரம் செய்துவருகிறார்கள். ஆபிரிக்கா கண்டத்தில் நீக்ரோ என்கிற ஜாதியார் இன்னும் சூரியனை வணங்குகிறார்கள்.

தற்கால ஐரோப்பிய சாஸ்திரங்களின் கொள்கையை ஒத்து நாகரீகமற்ற பூர்வீக ஜனங்கள் சூரியனிடம சத்திகள் இருந்ததாக அவர்கள் அறிந்துகொண்டது ஆச்சரிமாயிருக்கிறது.

3. சூக்கும வுலகின் பானு வாதனிடை
நாக்கிய அறன்றன் நிர்மல வன்பே.

வசனம்.

சூக்கும உலகத்தின் சூரியன் அதன்மத்தியில் தங்கிய இறைவனிட சுத்தமான அன்பாகும்.

விளக்கம்.

(1) சூக்குமலோக சூரியன் இறைவனுகான். அது இறைவனிடமிருந்துவந்த ஓர் பெருக்கு, அது அவ்வுலகிற்கு சூரியனுக தோன்றுகிறது. அது இறைவனிடமிருந்து புறப்படுகிற தெய்வீக அன்பும் ஞானமுமாம். நம்ம பெரியோரும்,

"அருளது சத்தியாகும் அரன்தனக் கருளையின்றி
தெருள்சிவ மில்லையந்தச் சிவமின்றிச் சத்தியில்லை"

என்றும்,

"சத்திதன் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும்
உய்த்திடு மிச்சைசெய்தி யிவைஞானத்துளவோ வென்
எத்திரஞான முள்ளத்திற் மிச்சைசெய்தி [னில்
வைத்திடு மரையின்ஞானன் மருவிடும் கிரியையெல்லாம்"

என்றும்;

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்திலர்"

என்றும் கூறியுள்ளார். ஓர் பொருளின் திதி ஏற்படுங்கால் அதன் பிரத்தியட்சமும் ஏற்படுகிறது, ஒன்று இருந்தால் மற்ற ஒன்று இராமல்போகாது. திதியானது பிரத்தியட்சத்தில் வெளியாகிறது. அவைகள் இரண்டும் ஒன்றேயாம். இறைவனிட திதி என்பது அன்பு. பிரத்தியட்சம், ஞானம். ஞானத்திலில்லாத அன்பு இல்லை. அன்பிலிருந்து உண்டாகாத ஞானமில்லை. அன்பு ஞானத்திலிருக்கும்போது பிரத்தியட்சமாகிறது. இவ்விரண்டும் நினைக்

கும்போதுமட்டும் பிரிக்கக்கூடியதும் செய்கையில் பிரிக்கக்கூடாததுமாயிருக்கிறது. தேகமில்லாமல் ஆன்மா நிற்காது. ஆன்மாயில்லாமல் தேகம் நிற்காது. இறைவன் திதியை அவர் ஆன்மா எனலாம். அவர் பிரத்தியட்சத்தை அவர் தேகமெனலாம். ஒரு பொருள் பிரத்தியட்சமானுல் ஒழிய அதன் நிலைமை இன்ருகும். ஏனெனின், பிரத்தியட்சமாகாதபோது உருவமில்லை. உருவமில்லாதபோது குணமில்லை. திதி தன்மையிலிருந்து வெளிப்பட்ட பிரத்தியட்சம், திதியிலிருந்து உண்டானமையால் அந்த திதியுடன் கலக்கிறது. ஆகையினுல் ஒன்று மற்றொன்றில் தன்னி லிருப்பது போல முழுமையுமிருக்கிறது. பிரத்தியட்ச மாகாததை "அவியக்த" மென்றும், பிரத்தியட்சமானதை "வியக்த" மென்றும் வடநூலோர் கூறுவர்.

இந்த பரமார்த்தமான சுத்த அன்பைக்கொண்டு கடவுள் உலகங்களை சிருஷ்டிக்கிருர். ஞானமானது அவர் வெளிப்படும் தன்மையை காண்பிக்கிறது. ஆகவே, எல்லா பொருள்களும் அவர் ஞானத்தைகொண்டு அன்பினுல் சிருஷ்டிக்கப்படுகிறது. பரமார்த்தயான சூரியன் ஒன்றே. பரமார்த்தமான பொருள்களுக்கு ஸ்தல பரப்பு இல்லை.

(2) ஒவ்வொரு பதார்த்தத்துக்கும் ஓர் பிரதான தத்துவமுண்டு. ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஓர்குணம் பிரதானமானது. அப்படி பிரதானமானது பிரதானதத்துவம். பிரதான தத்துவம் ஒரு வஸ்து என்ன என்பதை தெரிவிக்கிறது. (Form) உருவமானது ஆகிருதி. அந்த வஸ்து எம்மாதிரி நிற்கிறது. அல்லது வெளிப்படுகிறது. அது என்னசெய்யக்கூடும் என்பதை காண்பிக்கிறது. ஆகையால் ஒரு வஸ்துவின் திதி பிரதான தத்துவம். அதின் பிரத்தியட்சம், அது தோன்றும் உருவம். ஒவ்வொரு வஸ்துவுக்கும் பிரதான தத்துவமும் அதின் பிரத்தியட்சமும் வேண்டும். பிரதான தத்துவமில்லாவிட்டால் அது எதுவோ அந்தவஸ்து ஆகாது. அது பிரத்தியட்சபடாது. பிரதான தத்துவமிருந்து வெளிபடும் உருவம் இல்லாவிட்டால் அந்தவஸ்துவே இருப்பதாகும். உருவம் சிலதிக்கு இல்லை. வாயுவுக்கும், ஆகாசத்திற்கும் (ether) உருவம்

இல்லை. ஆனால் அவைகள் வெளிப்படும்வகை ஒன்றுண்டு. அவ்விதமாகவே நம்மிட உணர்விக்கும் எண்ணங்களுக்கும் உருவம் இல்லை. ஆனால் அதற்கு (form) அகோசரமான உருவம் உண்டு. அகோசரம் என்றால் கட்புலனால் பார்க்கமுடியாதது என்பது. அகோசர உருவத்தின் புறத்தோற்றம் தரிசயமான உருவம் அதாவது (shape) பார்க்கக்கூடிய உருவம். அகோசர உருவத்தின் புறத்தோற்றம், அந்த அகோசர உருவத்தால் உருவம் ஏற்படுகிறது. அப்பொழுது கட்புலனுக்கும் மெய்ப்புலனுக்கும் அகோசர உருவை வெளிப்படுத்துகிறது. தரிசய வடிவம் இருக்கும்கால், அதனால் அகோசர உருவம் மூடப்பட்டிருக்கிறது. அதனால் பரிமாணம் ஏற்படுகிறது. புலன்களிலும் நினைவிலும் அறியக்கூடியதாயிருக்கிறது. தரிசிய உருவம் ஓர்விதத்தில் அகோசர உருவத்தை வெளிப்படுத்துகிறது. அம்மாதிரியே அகோசர உருவம் பிரதான தத்துவத்தை வெளிப்படுத்துகிறது. அகோசர உருவம் இந்திரிய சம்பந்தமான சிந்தனையால் அறியமுடியாது. ஆனால் விவேக விசிட்டமான சிந்தனையால் மாத்திரம் அறியப்படும். ஆனால் சாதாரண ஜனங்களிடம் விவேக விசிட்டமான சிந்தனை இந்திரிய சம்பந்தமான சிந்தனைக்கு உள்பட்டு தன்னிட இந்திரிய சம்மந்தமான அறிவு ஒத்துக்கொள்ளாததை பொய் என்கிறது. சில சமயங்களில் சரீரம் ஆன்மாவின் அகோசர உருவம் என்பர். அதினும் உண்மை யிருக்கலாம்.

ஆத்மாவிற்கு பிரதான தத்துவமும் அகோசர சொரூபமும் உண்டு. மனிதனுக்கும் அம்மாதிரியே பிரதான தத்துவமும் அகோசர உருவமும் உண்டு. அவன் முதலில் ஆத்மார்த்தமான அல்லது பரமார்த்தமானவன். பின்னிட்டு ஜடமானவன்.

மனிதனை மனிதனாக்குகிறது எதுவோ அதுதான் முதலில் அவன். பிறகு மானிட பிரதான தத்துவத்தைமூடி அதன் நிஜ அகோசர உருவத்தை அனுசரித்து, கூடியமட்டும் அதை வெளிப்படுத்துகிற மானிட சரீரத்தில், மானிட பிரதான தத்துவம் முடிகிறது. பரமார்த்தமான உலகத்தில் இந்த தேகமானது பரமார்த்தமான அதாவது சூக்குமமான பொருளால் உண்டாக்கப்படுகிறது. இங்கும் அப்படியே - ஏனெனின், மனிதனுக்கு சூக்குமபொரு

ளால் செய்யப்பட்ட ஓர் சரீரமுண்டு. அதாவது சூக்ஷ்ம சரீரம் ஒன்று உண்டு. அவன் இவ்வுலகத்திலிருக்கும்போது ஜடப்பொருள்களால் செய்யப்பட்ட ஓர் தேகத்தை உடைத்தாயிருக்கிறான். அந்த தேகம் அது மூடும் சூக்ஷ்ம சரீரத்திலிருந்து உயிரை யடைகிறது. இரண்டு உலகத்திலும் சரீரம் ஆன்மாவிற்கு தகுந்த கருவியாயிருந்து அதைப் பார்க்கும்படி செய்கிறது. ஆகையினால் சரீரம் மாத்திரம் மனிதனிட ஜரிசய உருவமே ஒழிய அகோசர உருவமல்ல. ஆனால் அது அந்த அகோசர உருவத்துடன் ஒழுங்குபடுத்தப்பட்டும் அதை வெளிப்படுத்தியும் நிற்கிறதென்பதை கியாபகத்தில் வைத்துக்கொண்டு இம்மாதிரி வெளியான மனிதனிட அகோசர உருவத்தினின்று என்ன அறியலாமென்பதை பரியாலோசிப்பாம்.

மானிட அகோசர உருவம் சம்பூரணமானதா யிருக்கவேண்டும்-எனெனின், அது இறைவனிட அகோசர உருவத்தின் விசதமான பிரதிமையா யிருக்கிறபடியினால் என்க. அதன்பொருட்டு சம்பூர்ணமானதாக யிருக்கவேண்டும். மானிட உருவத்தின் ஒவ்வொருபாகமும் வெகு ஒழுங்காக செய்யப்பட்டிருக்கிறது. மற்ற ஜடவஸ்துக்கள் எல்லாம்கூட மானிட உருவத்தை யடையப்பார்க்கிறது. கடபடாதிகள் ஒவ்வொன்றிலும் மானிட உருவத்தின் செயலைப் போன்றவைகள் சில இருக்கின்றன. நம் சரீரத்தினுள்ளிருக்கும் அநேக உறுப்புகள் வெவ்வேறு வஸ்துக்களாயிருக்கின்றன. இம்மாதிரியே உருவம், இடம், தொழில் இம்மூன்று மிருக்கும். அளவிடற்கரிய சித்திர விசித்திரத்தில் ஓர் கட்டளை யிருக்கிறது. அதாவது ஒவ்வொருபாகமும் மற்ற பாகங்களுக்கு உழைக்கிறதே ஒழிய தன்னைப்பற்றி கவனிப்பதில்லை. எல்லா பாகங்களும் அங்கலட்சணமா யிருக்கின்றன. ஒவ்வொன்றும் தனக்கிட்ட வேலைசெய்ய தகுந்தபடி அமையப்பட்டிருக்கிறது. சரீரத்தின் முழுவேலையும் ஒவ்வொரு பாகத்தின் வேலையின் மொத்தமாகும்படி ஒன்றன்வேலை மற்றதுடன் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றும் மற்ற எல்லாபாகங்களின் நன்மைக்காக உழைக்கிறது. ஒவ்வொன்றும் தனக்காகவும்கூட உழைக்கிறது. ஒவ்வொருபாகமும் முழுதேகத்துக்கு சரியாய் உழைக்கும்பொருட்டு தன்னிட சுகத்திற்காக வேண்

டிய ஆகாரத்துக்கும் வலிமைக்கும் சம்பாதிக்க வேண்டியவரையில், மற்ற பாகங்களால் தனக்கு வரும் லாபத்துக்குதக்கவாறு தன்னிட நன்மைக்கும் வேலைசெய்கிறது. எல்லாபாகமும் இவ்விதமாக வேலைசெய்தால் சரீரம் சுகமாயிருக்கிறது. இல்லாவிட்டால் வியாதியடைகிறது. ஒன்று வேலைசெய்யாமல் தனக்குவேண்டிய அளவிற்கு மிஞ்சி எடுத்துக்கொண்டால் வியாதி உண்டாகிறது. மற்றவைகள் வருத்தமடைகின்றன.

மானிட உருவம் எல்லா உருவங்களிலும் சிறந்ததானதால் கடவுளானவர் எல்லாவஸ்துக்களையும் இம்மாதிரியே செய்ய முயலுகிறார். சுவர்க்கலோகத்தில் எல்லாம் கடவுள் சந்நிதானத்தில் மானிட அகோசர ரூபமாகவே நிற்கிறது. சுவர்க்க முழுமையும் சரீரத்தின் அவயவங்களிருப்பதுபோல் ஒவ்வொருவரும் ஒருதொழிலைச் செய்து ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு உபயோகமா யிருக்கிறார்கள். ஆகையால் அது சம்பூரணமானது. அதற்காகத்தான் கடவுள் சிருஷ்டிக்கப்புகுந்தது. உபயுக்த சித்தாந்தம் இதை நன்கு விளக்குகிறது. அனுபந்தம் பார்க்கவும்.

---

4. சூடும் சுடரும் அப்பரி தியினின்
றோடும் சூட்டின் சத்து அன்பு
நீடு மச்சுடர் தெருட்சி யாமே.

வசனம்.

அப்பரமார்த்தமான சூரியனிடத்திலிருந்து சூடும் ஒளியும் புறப்படும். அந்த சூட்டின் சாரம் அன்பு. புறப்படும் அவ்வெளிச்சம் ஞானமாகும்.

விளக்கம்.

தெய்வீக அன்பை நெருப்பாக கூறுவது வழக்கம். அம்மாதிரியே ஞானத்தை ஒளியாக கூறுவதும் வழக்கம். அன்பு பாராட்டும்போது சூடு உண்டாகிறது. ஞானத்தில் யோசிக்கும்போது ஞானம் வெளிச்சமாக பதார்த்தங்கள் தோன்றுகின்றன. இதனால்

அன்பின் பிரதான வஸ்து சூடு என்பது ஏற்படுகிறது. ஞானத்தின் பிரதமவஸ்து ஒளியாகும். ஆகவே சுவர்க்கலோகத்தின் ஒளியின் சாரம் ஞானமாகும். ஞானத்தினால் அன்பு நிலைபெறும். நிதரிசனமாக வசந்தகாலத்தில் சூடும் ஒளியும் ஒன்றுசேர்ந்து உலகத்தில் முளைத்தலாகி கடைசியாய் பலனைக் காண்கிறோம். மேலும் சூக்குமசூடு அன்பு என்றும், சூக்கும ஒளி ஞானமென்றும் ஒவ்வொருவருக்கும் தெரியும்.

இயற்கையாக, விவேக ஒளி, நம்ம உலக ஒளியிலிருந்து வருகிறதாக நினைப்பவர்களுமுண்டு. அது சரியன்று. அது சூக்கும உலகத்தின் சூரியனிடமிருந்துவருகிறது. அது மனக்காட்சி நேத்திர காட்சிக்கு செல்லுகிறது. சூக்கும உலகு வெளிச்சம் சிருஷ்டி உலகத்திற்கு போகிறது. எதிரிடையாக செல்லாது.

சூடானது அன்பில்மாத்திரமல்ல. சித்தத்திலுள்ள அன்பிலிருந்தும் வருகிறது. அதனால் சரீரத்திலிருந்து அம்மாதிரியே ஒளி ஞானத்தில் மாத்திரமல்ல, புத்தியின் எண்ணங்களிலும் பேச்சிலுமிருக்கிறது. பரலோகத்தின் சூடும் ஒளியும் உயிருள்ளவை. இவ்வுலகின் சூடும் ஒளியும் சிறந்தவை. அவ்வுலகில் சூடும் ஒளியும் அன்பாகிய சூரியனிடமிருந்து வருகிறது. இவ்வுலகத்தில் நெருப்புமயமான சூரியனிடத்திலிருந்து வருகிறது. தெய்வ அன்பே உயிர். நெருப்பு அசேதனமானது. அதில் உயிர் இல்லை. தேவர்கள் சூக்கும சூட்டிலும் ஒளியிலுமே ஜீவிப்பார்கள். நாம் அப்படியல்ல, தேவர்கள் மனிதர்களுடன் இருக்கிறார்கள். அவனிட பிராணன், உணர்ச்சி, எண்ணங்களில் கலக்கிறார்கள். மனிதன் ஓர் பிராணன். அந்த பிரணத்தால் அவன் நினைக்கிறான். மனிதனில் தீர்மானம் செய்யும்பாகம் சூக்குமலோகத்திலிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தன் மனதின் உள்பாகம் சம்மந்தப்பட்டவரையில் அவ்வுலகில்தா னிருக்கிறான். அவ்வுலகின் சூட்டினால் அவன் நேசிக்கிறான். அவ்வுலகின் வெளிச்சத்தில் அவன் சிந்திக்கிறான்.

5. மாந்தரிற் பெருக்கு மச்சூடும் சுடரும்
காந்தி சித்தத்தி லேகி யன்பின்
நலமும் பிரபை புத்தியிற் படிந்து
புலத்தின் மெய்யுந் தோன்றல் செய்யுமே.

வசனம்.

அந்த சூடும் ஒளியும் மனிதருள்ளேயும். அந்த சூடு சித்தத்தில் சென்று அன்பின் நன்மையையும் அந்த ஒளி புத்தியில் ஒடி ஞானத்தில் உண்மையையும் தோன்றல்செய்யும்.

விளக்கம்.

எல்லாபொருள்களும் நன்மை உண்மை என்கிற இவ்விரண்டுடன் சம்மந்தப்பட்டிருக்கிறது. இவ்விரண்டுடன் கொஞ்சமேனும் சம்மந்தப்படாதது இல்லை. இதற்காக மனிதனிட ஜீவனில் இரண்டு ஆசயங்களிருக்கின்றன. நன்மை சேருமிடமாகிய சித்தமும், உண்மை சேருமிடமாகிய புத்தியும். நன்மையானது அன்பிற்கு சேர்ந்தபடியினாலும், உண்மை ஞானத்துக்கு சேர்ந்தபடியினாலும், சித்தம் அன்பின் ஆசயமும், புத்தி ஞானத்தின் ஆசயமுமாக இருக்கிறது. நலம் அன்பிலிருந்து எங்ஙனம் கிளம்புகிறது என்று ஒருகடா கிளம்புகிறது. ஒரு மனிதன் ஒன்றை இச்சித்தால், அதை அடையவிரும்புகிறான். அதை கிரியையில் கொண்டு வரும்போது நல்லது என்கிறான். அவ்விதமாகவே ஞானத்திலிருந்து உண்மையும். ஏனெனின், எல்லா ஞானமும் உண்மையிலிருந்துதான் உண்டாகிறது என்க. ஞானமுள்ள ஒருவன் நினைக்கும் நன்மை அவன் நினைத்து செய்யும்போது நன்மையாகிற உண்மையாகிறது. இவ்விஷயம் நன்று யறியாதவர்கள் சூக்கும பிரவேசத்தை அறியமாட்டார்கள். ஏனெனில், மேல்சொல்லியபடி சித்தத்தில் ஒரு பிரவேசமும் புத்தியில் ஒரு பிரவேசமு மிருப்பதால் என்க. மனிதனிட சித்தத்தில் அன்பின் நன்மை பிரவேசிக்கிறது. அவனிட புத்தியில் ஞானத்தின் உண்மை பிரவேசிக்கிறது. இறைவன் சூரியனிடமிருந்து நேராயும், சுவர்க்கலோகத்தின் மத்திமத்

தாலும், இறைவனிடமிருந்து ஒவ்வொன்றும் புறப்படுகிறது. இந்த சித்தம் புத்தி என்கிற இரண்டும் ஆசயங்களில் சூடும் சுடர்போன்ற வெவ்வேறானது.

மனிதனிட மனதிலிருந்து பேச்சுக்கு பிரவேசமுண்டு. கிரியையிலும் பிரவேசமுண்டு. பேச்சியில் செல்லும் பிரவேசம் புத்தியின் மூலமாய் சித்தத்திலிருந்து வருகிறது. கிரியைகளில் பிரவேசிப்பது சித்தத்தின்மூலமாய் புத்தியிலிருந்து வருகிறது. இவ்வித பெருக்குகளையும் அறிந்திருக்கவேண்டும். மேல்சொல்லியவைகளால் சூக்கும சூடு மனிதனிட சித்தத்தில் பெருகி அன்பின் நலத்தை விளைவிக்கிறது. சூக்கும சுடர் புத்தியில் பிரவேசித்து ஞானத்தின் உண்மையை விளைவிக்கிறது.

---

6. பதியில் சூடும் சுடரும் தோன்றி
குதிக்கும் மானிட ஞான்மா விற்கூடி
இதிலிருந் தவன்மன துணர்வு நினைவிலும்
நுதியில் ஐம்புலன் சொற்றொழி லிலேகுமே.

வசனம்.

அந்த சூடும் ஒளியும் இறைவனிடத்தில் தோன்றி மனிதனிட ஆன்மாவில் பிரவேசமாகும். இந்த ஆன்மாவிலிருந்து, அவனிட மனதிலும், அதின் உணர்ச்சியிலும் சிந்தனையிலும் போகும். பின்னிட்டு கடைசியாக, ஐம்புலன்களிலும் பேச்சிலும், தேகத்தின் தொழில்களிலும் செல்லும்.

விளக்கம்.

1. உலகம் சித்தும் அசித்துமாகிய இருபகுதியை யுடையது. சித்து அறிவித்தாலறியும், அசித்து அசைவித்தால் அசையும். சேதனத்தை அறிவிக்கவும் அசேதனத்தை அசைவிக்கவும் வல்ல இறைவன் அருள்ஞானகிரியா சொரூபனாய்விளங்கும் தன்மை உண்மையால் அவருடைய அருள்ஞானக்கிரியைகள் அன்றி ஒருபொருளும் தானே அறியவும் அசையவுமாட்டாது. தானே உயிர் உண்டாக்கக்

கூடியதென்று நினைத்து Tyndall போன்ற பேர்பெற்ற ஐரோப்பிய சாஸ்திரிகள் பலவித சோதனைகள் செய்து பார்த்தார்கள். ஒன்றும் முடியாமல் போய்விட்டது. Professor Tyndall கடைசியாய் சொன்னதாவது. "முன்னிட்டே ஓர் உயிரின் உதவியில்லாமல் தனியாய் உயிரானது எப்பொழுதும் உண்டானதாக நம் நாளில் ருசுவுபடுத்த நம்பத்தக்க சோதனையான சாட்சியம் கிஞ்சித்தேனு மில்லையென்று நான் உருதியாய் சொல்லுகிறேன்."

2. மனது என்பது என்ன? நம்ம இந்துக்களிட சாஸ்திரபடி மனது சடப்பொருள். ஐரோப்பிய சாஸ்திரிகள் அதை சூக்கும பொருள் என்கிறார்கள். நம்ம சாஸ்திரம் மனதை இருவகையாய் பிரிக்கிறது. 1. ஒன்று அகத்திலுள்ள மனதின் தொழில், ஆனால் அது மனதுக்கு சம்மந்தமில்லாதது. 2. இரண்டாவது ஆன்மாவின் பிரதி பிம்பமானதும் முதல் சொல்லிய தொழிலுடன் கூடவரும் அறிவு. முதல் சொல்லியது சடப்பொருள் என்றும் இரண்டாவது சொல்லியது சூக்குமபொருள் என்றும் கூறுவர். அது எவ்வாறாயினும் உலோகாயுதர் ஆன்மாவென்பதே ஒன்றுமில்லை என்றும் பூதங்கள் ஒன்றோடொன்று புணர்தலே சிருஷ்டி என்பர். மனதுக்கு சேர்ந்த உணர்வு, ஆசை, அறிவு, மனோவிகாரம், மனக்கலக்கம் இந்திரியஞானம் முதலியவையும் சடமாகுமா? மனதுக்கோ ஆன்மாவிற்கோ சூக்குமகுணங்கள் உண்டு என்று ஏற்படுகிறது. ஆகையால் அவைகள் சூக்குமவஸ்துக்கள். சூக்குமவஸ்துவுக்கு சூக்கும தேகமுண்டு. ஆகையால் மனிதன் ஆன்மாவாகிறான். மனிதனைச் சுற்றிலும் சூக்குமபொருள்கள் இருக்கவேண்டும். அம்மாதிரி சூக்கும உலகு இருப்பதற்கு சாட்சியம் என்ன? தூரத்தில் உள்ள இருவரில் ஒருவர் மனதில் உள்ளதை மற்றவனுக்கு குப்தமாய் தெரியப்படுத்துவது Telepathy என்று ஆங்கிலேயபாஷையில் சொல்லப்படும். ஒருமனிதன் ஒருகருத்தை நினைத்தவுடன் கட்புலனுக்கு புலப்படாமல் தனக்கு ஒத்த ஓர் மனது எதிர்பட்டால் அந்த மனதில் பிரவேசித்து அக்கருத்தை அவன் தெரிந்துக்கொள்ளுகிறான். ஸ்தூலமான மூளை சக்தியினால் சடமில்லாத ஒன்றை எம்மாதிரி கொண்டுபோகப்பட்டது என்கிற கேள்வி உதயமாகிறது. ஸ்தூலவஸ்துவை கொண்டுபோக ஸ்தூலமண்டலம் வேண்டும், சூக்குமவஸ்து

ளைக் கொண்டுபோக சூக்ஷுமமண்டலம் வேண்டும். எண்ணங்கள் வெளியில் கொண்டுபோகப்பட மனோமண்டலம் வேண்டும். எண்ணங்கள் முதலியன மனோசக்திகள் உணர்ச்சியை உண்டாக்கவும் அதைப் பெற்றுக்கொள்ளவும் மூளையில் சூக்குமமானதும் ஜடமானதும் கலந்திருப்பதால் மனோசக்தியில் வெளிப்படும்போது இரண்டும் சேர்ந்திருக்கவேண்டும். ஆகையால் மனிதனில் ஒரு சூக்குமமண்டலம் இருக்கவேண்டும். அவனைச்சுற்றிலும் சூக்கும மண்டலம் ஒன்று இருக்கவேண்டும். ஆன்மா அப்படிப்பட்ட சுற்றியிருக்கும் சூக்குமமண்டலத்தோடு ஒற்றுமை படுகிறது என்பது ஏற்படுகிறது.

3. ஆன்மாவிற்கு தன்னிடம் சுயமாக பிராணன் இல்லை. உயிராகிய இறைவனிடமிருந்து பிராணனை யடைகிறது. எல்லா உட்பிரவேசமும் இறைவனிடமிருந்துவந்த உயிராகவே இருக்கிறது. எல்லா உட்பிரவேசமும், உயிரானதால், அந்த உயிர் தன் ஆசயங்களினுல்மட்டும் தொழில் செய்கிறபடியினுலும், மனிதனில் முதல் முதலில் அதாவது உள்ளேயிருக்கப்பட்ட ஆசயம் அவன் ஆத்மாவானபடியினுல், அந்த உட்பிரவேசம் கிரமமாய் தெரிந்துகொள்ள கடவுளிடமிருந்து ஆரம்பிக்கவேண்டும், மத்தியிலிருந்து ஆரம்பித்தால் உட்பிரவேச சித்தாந்தம் சக்கரங்களில்லாத தேர்போலாகும். ஆகையால் நாம் சூக்கும உலகு சூரியனையும், அதிலிருந்து அன்பு ஞானபிரவேசத்தையும், கடைசியில் உயிர் பிரவேசத்தையும் சொல்லவேண்டியிருக்கிறது.

ஆன்மாவின்மூலமாக மனிதனுக்குள் உயிரானது கடவுளிடமிருந்து பிரவேசிக்கிறது. ஆன்மாவிலிருந்து மனதில் செல்லுகிறது. அதாவது அதன் உணர்வு சிந்தனைகளில் செல்லுகிறது. இவைகளிலிருந்து ஐம்புலன்கள் பேச்சு தேகத்தொழில்களிலும் செல்லுகிறது. இதுதான் கிரமவழி. ஏனெனில் - மனது ஆன்மாவிற்கு கீழ்ப்படிந்தது. தேகம் மனதுக்கு கீழ்ப்படிந்தது. மனதுக்கும் இரண்டு உயிர்கள் உண்டு. ஒன்று சித்தம். மற்றது அறிவு.

சித்தத்தின் உயிர் அன்பின் நன்மை. அதிலிருந்து வருவதெல்லாம் அன்புகள் என்றுபெயர். அறிவின் உயிர் ஞானத்தின் உண்மை. அதில் உற்பத்தியாகப்பட்டவைகள் எண்ணங்கள். முன்

சொன்னதாலும் பின்சொன்னதாலும் மனிதன் உயிருள்ளவனுகிறான். தேகத்தின் உயிர் என்பது ஐம்புலன்களும், பேச்சுகளும் தொழில்களுமாம். அவைகள் நிற்கும் வரிசைக்கிரமத்திலேயே மனதின் மூலமாய் ஆன்மாவிடமிருந்து இவைகள் உற்பத்தியாகின்றன என்பது ஏற்படுகிறது.

மனிதனிட ஆன்மா மேலான சூக்கும வஸ்துவாயிருப்பதால் நேராய் கடவுளிடமிருந்து உட்பிரவேசத்தை யடைகிறது. மனது தாழ்ந்த சூக்கும வஸ்துவானபடியினுல் சூக்கும உலகத்தின் மூலமாய் இறைவனிடமிருந்து உட்பிரவேசத்தை யடைகிறது. சரீரமானது ஜடப்பொருள்களால் உண்டாக்கப்பட்டிருப்பதால் சிருஷ்டியின்மூலமாய் கடவுளிடமிருந்து உட்பிரவேசத்தை யடைகிறது.

அன்பின் நன்மையும் ஞானத்தின் உண்மையும் மனிதனிட ஆன்மாவில், ஒன்ருய் கடவுளிடமிருந்து வருகிறது. ஆனுல் மனிதன் அவைகளை பிரித்துவிடுகிறான். கடவுளிட இஷ்டப்படி நடக்கப்பட்டவர்களிடம் அவைகள் ஒன்ருகவே சேர்ந்திருக்கின்றன.

---

7. தூல லோக சோதி தீயே
தூல லோக மாதியிற் றோன்றி
தூல பாற்கர னுதவியால் நிலைக்குமே.

வசனம்,

ஸ்தூல லோகத்திலுள்ள சூரியன் (சுத்தமான) நெருப்பு. ஸ்தூல லோகமானது முதலில் தோன்றி அந்த ஸ்தூல சூரியனுல் (எப்பொழுதும்) நிலைக்கிறது.

விளக்கம்.

சிருஷ்டியும் அதின் உலகமும் அதாவது பலவித ஆகாயங்களும் கிரகங்கள் என்று சொல்லப்பட்ட பூமிகளும் எல்லாவித உற்பத்திகளும் சூரியனுலேயே ஜீவிக்கின்றன. அந்த சூரியனுனவன் தன்னிட ஒளி கிரணங்களாலும் சூட்டின் மாறுபாடுகளினுலும் எங்கு

மிருக்கிருன். இது எல்லா மனிதர்களுக்கும் தெரிந்தது. இச் சூரியனால் சதாபிழைத்தல் என்றால் அதின் இருத்தலுக்கும் அதுவே காரணமாகிறது. ஏனெனில், சதாபிழைத்தல் முதலிலிருந்தமாதிரி சதா யிருத்தலாகும் என்பதினால் என்க. ஆகையால் ஸ்தூல உலகு இந்த சூரியனால் உபயகாரணமாக கடவுள் சிருஷ்டித்தார் என்று ஏற்படுகிறது. சூக்கும பொருள்களுக்கு சூரியன் அன்பு என்று முன்னமே சொன்னோம். ஜடப்பொருள்களுக்கு தீமய மான இவ்வுலக சூரியன் கருத்தா. பின்சொன்னது முன்சொன் னதிலிருந்து உற்பத்தியாகிறது. இரண்டும் கடவுளிடமிருந்து உற் பத்தியாகின்றன.

8\. ஆகவே பரிதியின் விளைவெல் லான்ரு
னுகவே நோக்கில் ஜீவ னற்றதே.

வசனம்.

இந்த ஸ்தூல சூரியனிடமிருந்து உண்டாகும் ஒவ்வொருபொ ருளும் தானாகவே பார்க்குங்கால் சிறந்தவைகளாகின்றன.

விளக்கம்.

தன்புத்திக்கு சம்மந்தப்பட்ட விவேக விசிட்டமான மனோ சக்தியினால், அந்த புத்தியை சரீரத்தின் ஐம்புல பூதாதிகளுக்கு மேல்நிருத்தி, அன்பானது தான்மட்டும் என்னவென்று பார்த்தால், அது உயிருள்ளதாகவும், அதின் நெருப்பு தோற்றம் உயிர் என்றும் யாருக்கு விளங்காது? ஆகையால் பூதாதிகளில் ஒன்றாகிய தீயா னது உயிர் அற்றதென்றும், அத்தீயாகிய ஸ்தூலலோக சூரியனும் அதின் உற்பத்திகளும் உயிரில்லாதவை என்றும் ஏற்படுகிறது.

சூக்குமலோக சூரியனிட நெருப்பின் உள்பக்கத்தில் தெய் வத்தின் உயிர் இருக்கிறது. ஸ்தூலலோக சூரியனிட நெருப்பின் வெளியில் அது இருக்கிறது. ஆகையால் ஸ்தூலலோக சூரியன் சக்தி அந்த சூரியனிடமிருந்து அல்ல. சூக்குமலோக சூரியனிட

யிருந்து புறப்படும் ஜீவசக்தியிலிருந்துவருகிறது. சூரியனையும் அதைச்சேர்ந்தவைகளையும் சுற்றி சூக்குமசக்திகள் இருக்கிறது. அதினல்தான் பிரபஞ்சக்கிரியைகள் நடக்கின்றன. உயிர் சட உலகத்திலிருந்துவருகிறது என்பது பிசகு. சிருஷ்டியின்முடிவு கடைப் பொருள்களிலிருக்கிறது. கடவுளுக்கு எல்லா வஸ்துக்களும் மறுபடியும் தன்னிடம் வரவேண்டுமென்பதுதான் இச்சை.

---

9 மாந்தர் உடுப்பினை யுடுத்தல் போன்று தரிக்கும் சூக்கும பொருள்சடப் பொருளையே.

வசனம்.

ஓர் மனிதன் தன்மேல் ஆடையை உடுத்துக்கொள்ளுதல்போல் சூக்குமபொருள் ஜடப்பொருள்களை ஆடையாக உடுக்கின்றது.

விளக்கம்

எந்த தொழில் செய்வதற்கும் ஆடப்பட்டது ஒன்றும் நிச்சேஷ்டையானது ஒன்றும் ஆக இவ்விரண்டும் வேண்டும். ஒன்றினல் மட்டும் தொழில் ஏற்படாது. சூக்கும வஸ்துக்களும் ஸ்தூலவஸ்துக்களும் அவ்வாறே. சூக்குமவஸ்துக்கள் சலிக்கப்பட்டவை. சடப்பொருள்கள் செயலற்றவைகள். ஆகவே முதலிலிருந்து சூரியன் உலகத்திலிருந்தவைகளும், அதுமுதல் காலத்துக்காலம் தோன்றியவைகளும், ஸ்தூலப்பொருள்களைக்கொண்டு சூக்கும பொருள்களிலிருந்து உற்பத்தியானவை. பிராணிகள் வர்க்கத்துக்கும் கந்த மூலவர்க்கத்திற்கும் இம்மாதிரியேதான்.

ஒவ்வொரு காரியத்திலும் முதற்காரணமென்றும் துணைக்காரணமென்றும் இரண்டு உண்டு. இவைகள் இரண்டும் ஒன்று செய்யப்படும்போது ஒன்றுகசேர்ந்து நடக்கிறது. அதினல் ஒன்றுக தோன்றுகிறது. ஆனல் அவை இரண்டேயாம். அதினல்தான் ஞானநிபந்தனைகளில் ஒன்று, முதற்காரணமும் துணைக்காரணமும் ஒரு காரணமாகிறது என்பது. அம்மாதிரியே சூக்குமபொருளும் ஸ்தூலபொருளும் ஒன்றுகிறது. காரியத்தை வெளிப்படுத்துவதில்

இந்த இரண்டும் ஒன்றாக தோன்றுவதற்கு காரணமென்னவெனின் எண்ணம் பேச்சிலிருப்பதுபோலும், அன்பு சப்தத்தின் தொனியிலிருப்பதுபோலும், ஸ்தூலத்தில் சூக்குமம் இருக்கிறதினால் என்க. ஆகையினால் சூக்கும வஸ்துக்கள் ஸ்தூல வஸ்துக்களால் ஒருமனிதன் உடுப்பு போட்டுக்கொள்வதுபோல் போட்டுக்கொள்ளுகின்றன.

---

10. ஈண்டு மானிட னுடையாம் சூக்குமம்
தூண்டும் நீதியு மறிவு மவனில்
ஆண்டு சூக்கும சடமா குவானே.

வசனம்.

இவ்விதமாக மனிதனிட உடை போர்த்துக்கொண்ட சூக்கும பொருள் விவேகத்தையும் தர்மத்தையும் உண்டாக்கும். அவ்விதமானவிடத்தில் மனிதன் சூக்கும ஸ்தூலமனிதனாகிறான்.

விளக்கம்.

மேல்சொன்னதில் ஓர் மனிதன் உடை உடுத்துக்கொள்வது போல் ஆன்மா தேகத்தை தரித்துக்கொள்ளுகிறது என்பது ஏற்படுகிறது. ஏனெனில், ஆன்மா முதலில் மனிதனிடமனதில் தோய்ந்து, பின்னர், கடவுளிடமிருந்து ஆன்மா சதாகாலமும் அடைகிற உயிரைத் தன்னுடன் எடுத்துக்கொண்டும், தேகத்துக்கு மாற்றியும், அவனிட தேகத்தில் தோய்கிறது. அங்கே நெருங்கிய ஐக்கியத்தால், தேகத்தை உயிருள்ளதாக செய்கிறது. சூக்குமமும் ஸ்தூலமும் சேர்ந்தால் மனிதன் விவேகமாய் பேசுகிறான். தர்ம சிந்தனை உள்ளவனாகிறான். நாக்கு தன்னிடமிருக்கும் உயிரால் அல்ல, உள்ளிருக்கும் சிந்தனையால் பேசுகிறது. மற்றவைகளும் அப்படியே.

11. இச்சை ஞானத் தன்மை யொக்கும்
அவ்வெள் ளத்தின் யுக்த வேற்பே.

வசனம்.

அந்த பிரவாகத்தின் பெருக்கு மனிதனிடமிருக்கும் இச்சை ஞானத்தின் தன்மை யொக்கும்.

விளக்கம்.

நாம் முன்னிட்டு மனிதன் உயிர் அல்லவென்றும், கடவுளிட மிருந்து உயிர் அடையப்பட்டவனென்றும், அன்பும் ஞானமும் சேர்ந்தவிடத்து உயிர் தோன்றுமென்றும், கடவுள் அன்பாகவும் ஞானமாகவும் அதாவது உயிராகவே யிருக்கிறார் என்றும் சொல்லி யிருக்கிறோம். ஆகையால் மனிதன் எவ்வளவு அன்பை நேசிக்கி றானோ, அவன் அன்பில் எவ்வளவு ஞானமிருக்கிறதோ அவ்வளவு அவன் கடவுளிட பிரதிமையா யிருக்கிறான். அதாவது கடவுளிட மிருந்து ஜீவன் அமையும் ஆசயமாயிருக்கிறான்.

அன்பும் ஞானமும் தனித்தனியே உயிராகாது. ஆனால் அவை கள் உயிரின் பிரதான தத்துவங்கள். அன்பு ஞானம் இவைகளின் ஆனந்தங்கள் உயிராகிறது. ஏனென்றால் அவைகளால்தான் உயி ரின் அகோசர உருவம் உற்பத்தியாகிறது. கடவுளிடமிருந்துவரும் பெருக்கில் அந்த சந்தோஷங்கள் இருக்கின்றன. இது எம்மாதிரி இருக்கிறதென்றால், வசந்தகாலத்தில் சூடு, ஒளி இவைகளின் பிர வாகம் மனிதனுக்கு சந்தோஷத்தைக் கொடுப்பதுபோலும், அம்மா திரியே மிருகங்களும் பட்சிகளும் சந்தோஷமடைவதுபோலும், கந்தமூல பதார்த்தங்கள் பழுப்பதுபோலும் என்க. அன்பு ஞானத் தின் சந்தோஷங்கள் மனதை விரித்து அவைகளை அடையசெய் கின்றன. இதற்கு உதாரணமாக ஆத்மாவின் சந்தோஷத்தின் பெருக்குக்கு தக்கவாறு சந்தோஷம் முகத்தை விரிப்பதுபோலிருக் கிறது.

மனிதனிடமிருக்கும் அன்பு ஞானத்துக்கு தக்கபடி கடவுளிட மிருந்துவரும் உயிர் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

---

12. மானிட ரறிவு தன்பயிர்ச் சியொத்து
பொன்னாட் டின்ஒளி யுயர்ஞான மாக்கலாம்
அன்னதே கரும மொத்து சித்தம்
பொன்னாட் டின்சூ டாமன் பாகுமே

ஆயினு மறிவின் நல்ஞான மொத்து
மனங்கொள் செய்கை யில்லை யாயின்
அன்பாய் சித்தம் ஏற்ற லுராதே.

வசனம்.

மனிதனிடத்திலிருக்கும் அறிவை அதின் பயிர்ச்சிக்கு தக்கபடி சூக்குமலோகத்தின் வெளிச்சமாகிய உயர்ந்த ஞானமாக்கலாம். அத்தன்மையாகவே தன் கிரியைக்கு தக்கபடி இச்சையையும் தேவலோகத்தின் சூடாகிய அன்பாகசெய்யலாம். ஆயினும் அறிவினிட ஞானம் ஒத்து மனம் ஏற்றுக்கொண்டசெய்கை இல்லாவிட்டால் சித்தமானது அன்பாக ஏறுதலுராது.

விளக்கம்.

மனதில் அறிவு என்றும் சித்தம் என்றும் இரண்டு சக்திகள் உண்டு. அறிவு பொன்னுலகின் ஒளியை ஏற்கும்ஆசயம். அந்த ஒளி, ஞானம். சுவர்க்கத்தின் சூட்டை ஏற்கும் ஆசயம் சித்தம். அந்த சூடு, அன்பு. இவ்விரண்டும், அன்பும் ஞானமும் சூரியனாக கடவுளிடமிருந்து சுவர்க்கத்தில் மொத்தமாயும் தனித்தனியாயும் புறப்படுகிறது. அதினால் தேவர்களுக்கு அன்பும் ஞானமும் உண்டு; அம்மாதிரியாகவே இவ்வுலகத்திலும் பிரவாகிப்பதால் மனிதர்களுக்கும் அன்பும் ஞானமும் உண்டு. மேலும் இவ்விரண்டும் ஒன்றாய் பிரவேசிக்கின்றன. ஆனால் மனிதர்கள் அவைகளை ஒன்றாய் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. முதலில் வருவது வெளிச்சம். அது அறிவாகிறது. நிதானமாக பின்பு சித்தமாகும் அன்புவருகிறது. இது கடவுளிடசித்தம். ஒவ்வொரு மனிதனால் திருத்தப்படவேண்டும். அவன் சிறுவயதிலிருந்து உண்மை நன்மைகள் தெரிந்துகொள்ளவேண்டும். அப்படி தெரிந்துகொண்டால் சரியாய் வசிக்கலாம். அதாவது கிரமமாய் சிந்தித்து தொழில்களை செய்யலாம். ஆகையினால்தான் சித்தமானது அறிவினால் உண்டாக்கப்படுகிறது.

இதன்பொருட்டு தேவர்களைப்போல் வெளிச்சமடைய அறிவை உயர்த்தும் மனோசக்தியுண்டு. அச்சக்தியை உயர்த்தி மனிதன்

இகபரசுகங்களை அடையலாம். அவன் ஞானத்தை அடைந்து தன் இச்சையை அதற்கு அடக்கி நடத்தினால் விர்த்தியடைந்து ஆசீர் வதிக்கப்படுவான். தன்னிட அறிவை இச்சைக்கு உள்படுத்தினால் துன்பத்தை யடைவான். ஏனெனில் இச்சையானது எப்பொழு தும் தீங்குகளிடமே ஓடும். அதை அறிவினால் தடுக்காவிடில் கெடு திகள் செய்யவேண்டி நேரிடும்.

மனிதன் அறிவை தனியாய் சம்பூரணம் செய்துகொண்டும் அதன்மூலமாய் இச்சையையும் சம்பூரணம் செய்துகொண்டால் ஒழிய மனிதனாகமாட்டான் மிருகமாவான். கடவுளை அறியவு மாட்டான். இதற்காகத்தான் நம்பெரியோரும்,

" அகனமர்ந்து அன்பினராய் அறுபகைச்செற்று
ஐம்புலனுமடக்கி,
ஞானப்புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர் "

" அச்சு மடக்கி யறிவோ டிருந்தபின்
துஞ்சுவ தில்லை யுடம்பு."

என்றார்கள்.

ஆகையால் ஆறு உட்பகைகளாகிய காமம், குரோதம், உலோ பம். மோகம், மதம், மாற்சரியம், என்பவைகளையும், சுவை, ஒளி, ஊற்று, ஓசை, நாற்றம் என்கிற ஐம்புலன்களையும் வென்றால் ஒழிய சித்தநிரோதம் நீங்காது. அப்படி. சித்தநிரோதம் நீங்கினால் சுத்த மானசித்தம் அறிவுடன் சேரும். அவைகள் இரண்டும் ஒன்றுபட்டு நிற்கும். அப்பொழுது இறைவனைப்போன்ற அன்பும் ஞானமும் ஒன்றுபட்டு மனிதன் வாக்கு மனோதீத கோசரமாகிய அருள் ஞான சொரூபமாகிய இறைவனைக்காணலாம்.

அநுபந்தம். *

1. பரிணாமவாதம்.

பதார்த்தங்கள் மாறுதல் விஷயம் ஆரம்பவாதமென்றும் பரிணாமவாதமென்றும் இருவகை வாதங்கள் நம்மிட இந்து சாஸ்திரங்களில் உண்டு. ஆரம்பவாதத்தில் சடப்பொருள் அணுக்கள் அதாவது பூதங்களாகிய பிருதுவி, அப்பு, தேயு, வாயு இவைகள் நான்கும் ஆரம்ப உபாதானம் அதாவது நூலானது துணியாக செய்யப்படும் போது தன்னிட முக்கிய நூல்சுபாவத்தை இழக்காததுபோல் உலகத்திலுள்ள எல்லாப்பொருள்களையும் தங்களிட சுபாவம் கெடாமல் உற்பத்தி செய்கிறவைகளாம். மற்ற கொள்கையில், உலகத்தின் காரணம் பரிணாம உபாதானம். இதில் கூறும் பொருள் மாறுதலடைகிறது. புஷ்பமானது பழமாகும்போது புஷ்பமாயில்லாததுபோலும், பால் தயிராகும்போது தன்னிட பால் குணத்தை இழத்தல்போல், இந்த பரிணாம உபாதான வஸ்து பொருள்களாக மாறும்போது தன்னிட தனி குணத்தை இழந்துவிடுகிறது. இவ்விருவகை பேதங்களும் காரணம் காரியம் என்கிறவைகளில் ஒன்றுக்கொன்று சம்பந்தத்தை பேதப்படுத்துகிறது. நையாயிக வைசேஷிக சாஸ்திரிகள் காரியத்தில் காரணமில்லை என்கிற வாதமாகிய அசத்காரியவாதிகள். சாங்கியம், யோகம், வேதாந்தம், ஆகம சாஸ்திரிகள் காரணமும் காரியமும் ஒன்று என்றும் காரணத்தில் முன்னிட்டே காரியம் அவியக்தமாக யிருப்பதாக சொல்லுகிற சத்காரியவாதிகள். நையாயிகம், வைசேஷிகம் சாஸ்திர கோட்பாடுபடி அணு பதார்த்தங்களும் அணுவல்லாத பதார்த்தங்களும் ஒன்றோடொன்று சதா சேர்வதினாலும் பிரிவதினாலும் உலகம் உண்டாயிற்று என்பது. இதற்கு ஆரம்பவாதமென்று பெயர். கணாடர் என்பவர் அணுக்கள் சேர்தலுக்கு காரணம் கடவுள் என்கிற ஒன்று அல்ல. கண்களுக்கு தெரியாத ஒன்று அதாவது அதிரிஷ்டம் என்பது என்கிறார். பிரசஸ்தபாதர் பிரமா சிருஷ்டிப்பதும் சிவன் அழிப்

---

* இதை முன்வாசித்தால் சூத்திரங்கள் நன்றாய் விளங்கும்.

பது என்கிற கதையை சொல்லுகிறார். குசமாஞ்சலி என்கிற நூலில் நையாயிக உபாத்தியாயர் உதயனர் நாஸ்திக வாதங்களை தள்ளுகிறார். ஆனால் அவரும் கட்புலனுக்கு படாதகாரணம்,ஒன்று உண்டு என்கிறார். ஆனால் வைசேஷிகருக்கு மேல் ஈசுவர சக்தி யில்லாமல் அதிரிஷ்டம் என்பது காரணமாகாது என்கிறார். கடைசியாய் நையாயிகம் வைசேஷிகம் இரண்டும் கடவுள் உண்டென்கிற முடிவுக்கே வருகிறது. பின்னர் பரிணாமவாதத்தை கவனிப்போம். இதை சாங்கியம், யோகம் வேதாந்தம் ஆகமங்கள் ஏற்றுக் கொள்ளுகின்றன. இவைகள் நான்கும், காரணத்தில் காரியம் அவியக்தமா யிருக்கிறது என்ற சத்காரியவாதிகள். சாங்கியகாரிகையில் காரியம் பிரத்தியட்சமாவதற்குமுன் இருக்கிறது என்பதற்கு அடியில்கண்ட ஐந்து காரணங்களை சொல்லப்பட்டிருக்கின்றன. (1) இல்லாதவஸ்து உண்டாகாது, மணலிலிருந்து எண்ணெய் வராது. (2) ஒரு காரியம் உண்டாக அதற்கு தகுந்த பொருள் எடுத்துக்கொள்ளுகிறோம். தயிர் உண்டாக்க பால் வேண்டும், ஜலம் வேண்டியதில்லை. (3) எவ்வித காரணத்திலும் எவ்வித காரியமும் உண்டாகாது. (4) ஒரு எஜமானன் தன்னால் கூடியதைமட்டும் செய்வான். (5) காரணத்தைபோலவே காரியமும் ஒரே சுபாவமுடையது. துணி, நூல் சுபாவமுள்ளது. சாங்கியம் வைசேஷிகத்துக்கு விரோதமாக சொல்லுகிறது.

வேதாந்த சூத்திரம் சத்காரிய வாதத்திற்காக ஒரு பிரிவு எழுதியிருக்கிறது. சாந்தோக்கிய உபநிஷத்தில் அடியில் கண்டமாதிரி சொல்லியிருக்கிறது. "இது முதலில் சத்தாக யிருந்தது. இந்த உலகும் ஆரம்பத்தில் காரணப்பொருளா யிருந்தது அதாவது காரியம் காரணத்தில் மறைந்து இருந்தது." ஆகமங்கள் சத்காரியவாதத்தை ஏற்றுக்கொண்டு இந்த விஷயத்தை அவ்வளவாக கவனித்து பேசுகிறதில்லை. இருக்கப்பட்டது எப்பொழுதும் இருக்கிறது என்கிற சத்காரியவாதம் பூர்வீகத்திலும் தற்காலத்திலும் எல்லா சாஸ்திரங்களிலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. Sir Oliver Lodge என்கிற ஆங்கிலேய சாஸ்திரியாரும் அதை ஒத்துக்கொள்ளுகிறார். இந்த சத்காரியவாதம் அசத் காரியவாதமென்கிற தர்க்கம் நாளைக்கும் இருக்கிறது. சத் காரியவாதத்தால், உலகம் செய்யப்பட்ட

பொருளாகிய உபாதான காரணம், உலகத்தில் தோன்றும் பல பதார்த்தங்களை உற்பத்திசெய்ய, மாறுதல் அடைகிறது என்று ஏற்படுகிறது. இதற்கு பரிணாமவாதம் என்று பெயர்.

இவ்வித நம்மிட சாஸ்திரங்கள் கூறுவதில் விஷயங்கள் தெளிவாய் ஏற்படுகிறதில்லை. மேலும் இருவித வாதத்திலும் சடப்பொருள்களையே உதாரணமாக கூறப்பட்டிருக்கிறது. ஞானியார் ஸ்வீடன்பர்க் எடுத்துக் காண்பித்திருக்கும் "படிப்படி மாறும் சித்தாந்தம்" என்பது சிருஷ்டி விவரத்தை நூதனமாயும் தெளிவாயும் வெளிப்படுத்துகிறது. இந்த ஞானியர் வாதத்திற்கும் பரிணாமவாதமென்றே பெயரிடலாம்.

ஞானியர் ஸ்வீடன்பர்கின் பரிணாமவாதம் என்கிற படிப்படி மாறும் சித்தாந்தம்.

இதிலும் இருவிதம் உண்டு. ஒருவகையில் ஒருபொருள் பெரியது அல்லது சிறியதாகிறது. இம்மாதிரி மாறுவதில் அதன் சுபாவம் குறைவுபடாது. சூடாயிருப்பது அதிக சூடாகிறது. பிரகாசமாயிருப்பது அதிக பிரகாசமாகிறது. இதை தொடர்ச்சி மாற்றம் என்று சொல்லலாம். வேறுவிதமாய் **அபின்னமாற்றம்** என்றும் சொல்லலாம். இவைகள் ஒன்றோடொன்று தொடர்ந்திருக்கும். இவைகள் சுபாவம் மாறாது. இவைகள் ஒரு சமக்ஷேத்திரத்திலிருக்கின்றன. இவைகளை இவ்வாறு மாறுதல் அடைந்தும் ஒரே மட்டத்திலிருப்பதால் அகலமாற்றம் என்றும் பெயரிடலாம். மற்ற விதத்திற்கு **பின்னமாற்றம்** என்று பெயர். இதற்கு பரிஷ்காரமாய் வேறனது என்று பொருள். இவ்விதம் மாறும் பொருள் வேறு பொருளாகிறது. முன்னிருந்ததைவிட அது அதிகம் அல்லது குறைவுபடுகிறது. ஆகலே இதற்கு உயரமாற்றம் என்று பெயர். இதற்கு சாதாரணமாய் கொடுக்கும் உதாரணம், நோக்கம் (முடிவு)—காரணம்—காரியம் (பலன்) எதற்காக பின்சொன்னவைகள் இருக்

கின்றனவோ அது முடிவு. அது காரணத்துக்கு ஏதுவாயிருக்கிறது. காரணம் வேண்டிய காரியத்தை உற்பத்திசெய்கிறது. அந்த காரியத்தில் காரணம் வேலைசெய்கிறது. முடிவு திருப்தியடைகிறது. இந்த மூன்றிலும் முடிவு, அதிக உயரமானது. காரணம், நடுத்தரமானது. காரியம், தாழ்ந்தது. அதாவது முடிவு முதன்மையானது-காரணம் மத்தியமானது. காரியம் கடைசியானது. இந்த மூன்று அந்தஸ்துகளும் ஒவ்வொருபொருளிலும் உண்டு. எந்தபொருளும் ஒரு விஷயத்திற்காகதான் இருக்கிறது.

இன்னும் ஓர் உதாரணம் கூறுவாம்.

அன்பு—சிந்தனை—கிரியை.

ஒரு கிரியை நடத்தவேண்டுமானால் அன்பு அல்லது அக்கிரியை நடத்த ஓர் விருப்பம் வேண்டும். இந்த விருப்பம் சிந்தனையை உண்டாக்குகிறது. சிந்தனையால் கிரியை உண்டாகிறது. இந்த மூன்று வெவ்வேறான வஸ்துக்களும் ஒவ்வொரு கிருத்தியத்திலுமிருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றிலும் எல்லாவித தொடர்ச்சி மாற்றங்களும் உண்டு. அதாவது அன்பின் வலிமையிலும், காரணத்தின் யுக்தத்திலும், கிரியையின் சம்பூரணத்திலுமாகிறது. முன் கூறிய இரண்டும் கடைசி சொன்னதில் முடிகிறது. அதில் எல்லாம் இருக்கிறது. முடிவு அதில் அடையப்படுகிறது. காரணங்கள் வேலைசெய்து பலிக்கத்தக்கதா யிருக்கிறது. முடிவும், காரணமும், காரியத்திலிருக்கிறது. முடிவு அல்லது நோக்கம் காரணம் காரியம் எல்லாவற்றிலு முண்டு. கடவுளிடத்திலேயே அவைகள் உண்டு. அவைகள் அவரிடம் அன்பு—ஞானம்—சத்தியாகிறது - எல்லாம் அவருடையதா யிருப்பதால் முடிவற்றதாம். மனிதன் கடவுளின் பிரதிமைபோல் சிருஷ்டிக்கப்பட்டதால் எல்லாம் அன்பு-சிந்தனை - கிரியையா யிருக்கின்றன. அன்பை சம்பூரணம்செய்ய தகுதியான நோக்கங்களுக்கு முடிவற்ற ஆசைதான் அவர் அன்பு. அவரிட முடிவற்ற ஞானம் அவரிட அன்போடு ஒன்றாய், அவரிட முடிவற்ற சத்தியை தகுதியான பலன்களை தர நடத்துகிறது. இந்த காரியம் சிருஷ்டி. இது அவரிட அன்பிலும் ஞானத்திலும் முடிவு பெறுகிறது.

தேவர்களிடம் இம்மூன்றும் தெய்வீகமானது. சூக்குமமானது இயற்கையானது. முதலானது அன்பின்படிகள். இரண்டாவது ஞானத்தின்படிகள். மூன்றாவது பலன்படிகள்.

மனிதனிடத்திலும் தெய்வீகமானதும், சூக்குமமானதும், ஜடமுமான மூன்றுபின்ன மாற்றங்கள் உண்டு. மனிதன் பிறக்கும் போது சடப்படியிலிருக்கிறான். தொடர்ச்சி மாற்றத்தின்படி அறிவு அதிகமாய் விவேகியாகிறான். இதனால் சூக்குமபடி திறக்கப்படுகிற தில்லை. அறிவினால் பிரயோசன மானவைகளை செய்தால் அதாவது அயலானை நேசித்தலினால் இது திறக்கப்படுகிறது. தொடர்ச்சி மாற்றத்தாலேயே நன்மை உண்மைகள் தெரிந்துகொள்வதினாலும் இது விர்த்தியாகும். அப்படி தெரிந்துகொண்டும் மூன்றாவதுபடியாகிய தெய்வீகப்படி திறக்கப்படுகிறதில்லை. இது கடவுளின்பேரில் அன்பாக யிருக்கிற பிரயோசனமான காரியங்களை செய்யவேண்டுமென்கிற தெய்வீக அன்பினால் திறக்கப்படுகிறது. கடவுளிடத்து அன்பு என்பது கடவுளின் உத்திரவுகள்படி செய்கையில் காண்பிப்பதினால் அதாவது கெடுதியானதை நீக்கி நல்லவற்றை செய்தலாம். இம்மாதிரி மனிதனால் மூன்றுபடிகளும் திறக்கப்படுகின்றன.

மனிதனிடத்தில் இரண்டு மனோசக்திகள் உண்டு. விவேகம் என்பதினால் எது நன்மையானதென்று தெரிந்துகொள்ளுகிறான். இதுதான் அறியும் சக்தி. உண்மையானது நல்லதையும் செய்யும் சக்தி, சுயர்ச்சிசக்தி. இது சித்தத்தை சேர்ந்தது. இவை இரண்டும் கடவுளிட இச்சைப்படி ஒத்து நடத்தலினால் மனிதன் கடவுளைப்போலாகிறான்.

நோக்கம், காரணம், காரியம் இவைகளைப்பற்றி முன்னமே சொன்னோம். பின்ன மாற்றத்துக்கு இன்னும் சில உதாரணங்கள் எடுத்துக்காண்பிப்போம்.

1.	அன்பு	சிந்தனை	தொழில்
2.	தருமம்	நம்பிக்கை	நற்செய்கைகள்
3.	சித்தம்	அறிவு	தொழில்

ஒவ்வொன்றிலும் முடிவுகள் பலன்கள், தொழில், அப்பியாசமாயிருக்கின்றன.

4. கடவுள் சூக்ஷ்மலோகம் ஸ்தூலலோகம்
அல்லது கடவுள் ஆன்மா ஜடப்பொருள்

இவைகளை மறுபடியும் கவனிப்பாம். ஜடப்பொருள் கடைசியானது. இந்த மூன்றிலும் பிரபஞ்சமெல்லாம் அடங்கியிருக்கின்றது. கடவுளின் விருப்பம் அல்லது நோக்கத்தில் முடிவு இருக்கிறது. அதாவது அந்த முடிவில் எல்லாப்பொருள்களும் எதற்கு உண்டானதோ அது இருக்கிறது. அவர் சூக்ஷ்ம உலகத்தை சிருஷ்டிக்கிறார். அதினாலேயும் அதின் மூலமாயும் துணைக்காரணமாக ஜடப்பொருள்களை சிருஷ்டிக்கிறார். இதனால் கடவுளிட நோக்கம் நிறைவாகிறது. இந்த கருத்தானது கடவுள் தன்னிட உயிரையும் அன்பையும் ஞானத்தையும் ஜீவன்களுக்கு சொந்தமாக கொடுக்க இந்த பிரபஞ்ச ஜீவன்களை உற்பத்திசெய்கிறார். மனிதர்கள் அவரிடமிருந்து உயிரை அடைந்தும், கடவுளை சிருஷ்டிகர்த்தா என்று தெரிந்தும், அவர் கொடுத்தபடியினால்தான் அந்த ஜீவன் தம்முடையதென்று தெரிந்தும், அவர் உத்தரவுபடிக்கும் அவர் உதவியைக் கொண்டும் தங்களிடத்தில் தெய்வீக குணங்களை கடவுள் உண்டாக்கவும் சுவர்க்கம் அடையவும் செய்துக்கொள்ளலாம்.

ஆகையால் இறைவனிடமிருந்து புறப்படும் சலனம் ஆன்மாவின் பற்பல படிகளிலும் செல்லும்போது மாறுதல் அடைகிறது. ஒரு அன்புநிறைந்ததும், சுத்தமான முன்தள்ளப்பட்டவேகம் ஆன்மாவை என்னமாய் அசைக்கிறது என்பதை பார்ப்போம். முதலில் இந்த பிரவாகம் சுத்த ஆசையாயிருக்கிறது. பின்பு சித்தமானது அறிவை அசைத்து சுத்தமான சிந்தனையை உற்பத்திசெய்கிறது சிந்தனையானது இச்சையினால் தூண்டப்பட்டு சூக்கும ஸ்தூலசரீரங்களில் பற்பலபடிகளான பொருள்களாய் ஒரு மேன்மையான செய்கையில் முடிகிறது.

---

2. ஒற்றுமை வாதம்.

ஒற்றுமை என்பது ஓர் உயர்ந்ததும் எதுவர்த்தகமான பொருளுக்கும், அவ்வகை பொருளினால் அதன்மூலமாய் உற்பத்தியாகிற

தும், உயர்ந்த பொருளுக்கு "பிரதிநிதியாய் நிற்பதுமான தாழ்ந்த பொருளுக்கும், உள்ள சம்மந்தத்தை ஓர்விதமாய் ஒற்றுமை என லாம். ' ஸ்வீடன்பர்க் ஞானியார் சொல்வதெல்லாம் ஒவ்வொரு பொருளும் கடவுள் தன்னிடமிருந்து வெளிப்படும், ஓர் பெருக்கி ஞல் சிருஷ்டிக்கிருர் என்பதேயாம்.

முழு பிரபஞ்சமும் கடவுளுக்கு சமதூரத்தில் இல்லை. சிலது அவருக்கு சமீபமாகவும் சிலது தூரத்திலு மிருக்கிறது. ஆன்மா வானது ஜடப்பொருளைவிட, அவர் சமீபத்திலிருக்கிறது. ஆன்ம லோகத்திலும் ஸ்தூல லோகத்திலும் அவர் சமீபம் என்பது பற்பல படிகளா யிருக்கின்றன. சமீபம் அல்லது தூரம் என்பவை இடத் தை குறித்தது அல்ல. நிலைமையை குறித்தது. கண்டிப்பாய் அந்தஸ்து வித்தியாசத்தை உடையது. இவைகளில் சிலது அதே மட்டத்தில் தொடர்ச்சி மாற்றங்களாகவும் சிலது பின்ன மாற்றங்க ளாகவு மிருக்கிறது.

கடவுள் அனுசரித்து சிருஷ்டிக்கும் நிபந்தனைகளில் ஒன்று, இந்த பின்ன மாற்றங்களால் அல்லது அவைகள்மூலமாய், உயர்ந்த பொருள்களை துணைக்காரணமாக தாழ்ந்தபொருள்களை சிருஷ்டிக்கி ருர் என்பது. இம்மாதிரி ஆன்மாக்கள் எல்லாம் ஜடப்பொருளை விட உயர்ந்தது. ஆன்மாவின் மூலமாய் ஜடப்பொருள் உருவத்தை அடைகிறது. உதாரணமாக, தாயினிடத்து கருவுதரித்து சுரோணி தம் உயிர் இழந்தால் இறந்துபோகிறது. உயிர் இருந்தால் அது சூக்கும உயிர், முதல் தாயினிடமிருந்தும் அதற்கு தகுந்த பொருள் களிடமிருந்தும் சரீரத்தை உண்டாக்கும் பொருள்களை சேர்க்கிறது. சரீரமானது சிறு பொருளிலிருந்து பெரிய சரீரமாகிறது நமக்கு தெரியும். ஆன்மா வளரும்போது அதற்கு உருப்பான சடசரீரம் ஆன்மாவின் மூலமாய் அல்லது ஆன்மாவினுல் உண்டாகிறது. ஏனென்ருல் எப்பொழுதும் ஆன்மா அல்லது ஆவிதான் காரண மாகிறது; சடப்பொருள் காரியமாகிறது.

இம்மாதிரியே ஆன்மாவிற்கும் தேகத்துக்கும் உள்ளபடி, சூக் குமலோகம் முழுமைக்கும் ஸ்தூலலோக முழுமைக்கு மிருக் கிறது. அந்த முழு சூக்குமலோகம் மூலமாய் ஸ்தூலலோகம் முழு

மையும் சிருஷ்டிக்கப்படுகிறது. இது எக்காலத்துக்கும் உண்மை. எல்லாப்பொருள்களுக்கும் சத்திகளுக்கும், பொருள்களின உருவங்களுக்கும், சலனங்களுக்கும் சூக்கும உலகு காரணமாயிருக்கிறது. இவைகளில் ஒவ்வொன்றும் முதலில் சூக்குமமாயிருந்து, பிறகு, சிருஷ்டி சக்தி அதில் செல்லுவதினுல் ஸ்தூலமாகிறது. பொருளானுலும், சக்தியானுலும், எந்தபொருளானுலும் அதின் மாற்றம் இம்மாதிரியே. அகத்துள்ளதும் புறத்துள்ளதுமாகிய எந்தபொருளும் எப்பொருளும் சலித்துக்கொண்டிருப்பதால் இந்த மாறுதல்கள் எப்பொழுதும் நடக்கின்றன. இந்த எல்லாசலனமும் செய்கையும், முதலில் சூக்குமமாயிருந்து பிறகு ஸ்தூலமாகிறது. மறுபடியும் முதலில் சொன்ன ஆன்மா, தேகம் இதை யோசிக்கலாம். ஆன்மா தேகத்தை உண்டாக்கும்போது அல்லது ஆத்மாவின் மூலமாய் தேகம் உண்டாகிறமாதிரி, ஆத்மாவானது தேகத்தை அதன் பிரதிநிதியாகவும் கருவியாகவுமிருக்க தேகத்தை உண்டாக்குகிறது. அது அதன் பிரதிநிதியானபடியினுல் அது அதன் கருவியாகவு மிருக்கலாம். அதாவது ஆத்மா ஒவ்வொரு பாகத்துக்கும் உயிர்கொடுக்கத் தகுந்த மாதிரியாகவும் தனக்கு தேகத்தை உடுப்பாகவும் காண்கிறபடியினுலும் அது அதன் கருவியாகிறது. தான் உடுத்திருக்கும் தேகத்தின் ஒவ்வொரு பாகத்தையும் ஆன்மா கட்டளையிடுகிறபடி நடக்கச் செய்ய அதற்கு சத்தியுண்டு. அதாவது ஸ்தூலதேகம் ஆன்மாவுடன் ஒற்றுமைபட்டிருக்கிறது. நாம் ஒற்றுமை என்று சொல்லியது சூக்குமபொருளுக்கும் ஸ்தூலபொருளுக்கும் உள்ள ஒரு சம்மந்தத்தை காண்பிப்பதற்கு மட்டும்தான்.

இந்த ஒற்றுமைக்கு உதாரணமாக மனிதனிட முகத்திற்கும் அன்பிற்கும் சிந்தனைகளுக்கும் உள்ள சம்பந்தத்தை சொல்லலாம். பின் சொன்னவைகள் எப்படி யிருக்கிறதோ அப்படியே முன் சொன்னதும். ஓர் மனிதன் ஓர் பெரிய சிந்தனைக்குள்ளானுல் முகத்தில் மாறுதல் சேரிங்கிறது. அம்மாதிரியானது வெளியிருப்பது உள்ளிருப்பதின் காரியம் என்று அறிக. இது ஒரு ஒற்றுமை.

ஸ்தூலலோகம் முழுமையும் சூக்குமலோகத்தோடு ஒத்திருப்பதாக முன்சொன்னேம். இந்த உலகங்களை ஒவ்வொன்றிலுங்கூட

ஒற்றுமையிருக்கிறது. ஏனெனில், சூக்கும உலகில் உள்ளவர்கள் சிந்தித்து உணருகிறார்கள். அவர்களிட சிந்தனைகளும் அன்புகளும் ஒன்றுசேர்ந்து அவர்களிட அகத்திலுள்ள சூக்கும உலகமாகிறது. ஆனால் அவர்களுக்கு புறத்திலுள்ள உலகம் மனிதருக்கு இருப்பது போலிருக்கிறது. அவைகள் எல்லாம் அவர்களிட புறத்திலுள்ள சூக்கும உலகு. அவர்களிடவெளி சூக்கும உலகு, அவர்களிட உட்புறத்திலுள்ள சூக்கும உலகத்தால் அல்லது அதன்மூலமாய் உண்டாகிறது. அதாவது அவர்கள் புறத்திலுள்ள உலகின் பொருள்கள் அல்லது சக்திகள் ஒவ்வொன்றாய் அவர்கள சிந்தனைகள் அல்லது அன்பினால் உண்டாக்கப்படுகிறது.

அம்மாதிரிதான் இந்த ஸ்தூலலோகத்திலும். ஆனால் ஓர் வித்தியாசமுண்டு. மனிதர்கள் இவ்வுலகிலிருக்கும்போது ஸ்தூலலோகம், வீடு, எல்லாபிராணிகள் இவைகளை தங்களுக்கு கருவிகளாக உடைத்தாயிருக்கிறார்கள். அவர்களுக்கு சிந்தனைகளும் அன்புகளும் உண்டு. பின்சொன்னவைகள் ஆன்மாவிற்கு சேர்ந்தது. ஸ்தூலவஸ்துக்களாய் உள்ளவைகள் தங்கள் ஆவிகளால் அல்லது அவைகளின் மூலமாய் உண்டாக்கப்படுகின்றன.

மேலே இருக்கும் வஸ்துக்களால் அல்லது அவைகள் மூலமாய் சிருஷ்டிக்கப்பட்ட கீழ்யிருக்கும் பொருள்கள் அவைகளுடன் ஒத்திருக்கிறது. இதனால்தான் ஸ்தூலலோகமும் சூக்குமலோகமும் ஒத்திருக்கிறது. இதனால்தான் சிந்தனைகளும் அன்புகளும் இந்த உலகத்தைப்போல் அவ்வுலகத்திற்கும் உண்மையான வெளிப்பொருள்களும் ஒத்திருக்கின்றன. அந்த உலகத்தில் அது குறிப்பாய் உண்மையாயிருக்கிறது. ஏனென்றால் அந்த உலகத்தில் ஒரேமாதிரி ஆன்மாக்கள் ஒன்றாய் சேர்ந்திருக்கின்றன. அவர்கள் தங்களிட அக உலகத்தை புற உலகத்தால் வெளிப்படுத்துகிறார்கள். இந்த உலகத்தில் எல்லாவிதமான மனிதர்களும் ஒன்று சேருகிறார்கள். தேவர்கள் புற உலகம் அக உலகத்துடன் பொதுவாய் ஒத்திருக்கிறது.

இந்த ஒற்றுமையால்தான் சிருஷ்டி செய்யப்பட்டது. சிருஷ்டி சக்தி ஒன்றில்சேர்ந்து இந்த ஒற்றுமை சித்தாந்தத்தால் கீழ் இருப்

பதை சிருஷ்டிக்கிறது. இது முதலிலிருந்து கடைசிவரையிலும் பிரபஞ்ச முழுமையும் செல்லத்தகுந்தது. இதனால்தான் சிருஷ்டிக்கப்பட்ட பொருள்கள் எல்லாம் ஒன்றாய், இந்த முழு சிருஷ்டியும், சிருஷ்டி கர்த்தாவுடன் சம்மந்தப்படுகிறது. சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொன்றும் தான் சிருஷ்டிக்கப்பட்ட உயர்ந்த காரணமான வஸ்துவுடன் ஒத்திருக்கிறது. இப்படி உண்டான வஸ்து தாழ்ந்து இன்னும் ஒரு வஸ்து உண்டாக காரணமாயிருக்கும். இது அதின் காரணத்துடன் ஒத்திருக்கிறது. கடைசியாக முழு சிருஷ்டியும் சிருஷ்டிகர்த்தாவாகிய கடவுளுடன் ஒத்திருக்கிறது அல்லது அவரை வெளிப்படுத்துகிறது.

---

3. உபயுக்தவாதம்.

ஞானியார் ஸ்வீடன்பர்க் அவர்கள் கூறியவைகளில் இந்த சித்தாந்தம் பலவிஷயங்களடங்கியது. இதற்கு சம்மந்தப்படாத உயிர் வடிவமில்லை. கடவுள் சிருஷ்டித்தவைகள் எல்லாம் உபயோகங்களின் உருவங்கள். அவைகள் உபயோகத்திலிருந்து, உபயோகத்தில், உபயோகத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டன.

இப்பிரயோசனங்கள் சிருஷ்டிக்கு என்ன சம்மந்தம்? இந்த சித்தாந்தம் சிருஷ்டியில் ஒற்றுமை சித்தாந்தத்தை அறிந்துகொள்ள திறவுகோல்போலிருக்கிறது. ஸ்தூலலோகத்தில் எந்தவஸ்துவின் சூக்கும பிரதி உருவம் தெரியவேண்டுமானால் அந்தவஸ்துவின் உபயோகம் தெரியவேண்டும். கடவுளிடமிருந்து உயிர் பிரவாகம் பிரபஞ்சத்தில் உபயோகங்களாகவும் அதிலிருந்து அவைகள் வடிவங்களாகவும் வெளிவருகிறது. பிரபஞ்சமானது, பிரயோசனங்கள் உற்பத்தியாக, கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. உபயோகத்தால் உருவமும், உருவத்தால் பிரயோசனமும், தெரிந்துகொள்ளலாம். பிரயோசனம் கடவுளிடமிருந்து பிரவாகிக்கிறது.

பின்னமாற்ற சித்தாந்தத்தை இந்த சித்தாந்தம் நன்றாய் விளக்குகிறது. பின்னமாற்ற சித்தாந்தத்தைக்குறித்து முன்னமே சொல்லியிருக்கிறோம். இந்த உபயுக்த சித்தாந்தமும் இதை விளக்குகிறது.

காரணங்களாயிருந்த உபயோகங்களின் பிரதிநிதிகளாக எல்லாகாரியங்களு மிருக்கிறது. அதின் மூலாதாரங்களான நோக்கங்களின் பிரதிநிதிகள் என்பது இந்த உபயோகங்கள். சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொன்றும் உபயோகமாக யிருந்தாலும் அது பொருள்களில் ஏறிக்கொண்டே போகிறது, கடவுளிடமிருக்கும் மூலகாரணத்துக்கும்கூட்ட காரியங்களிலிருந்து காரணங்கள் மூலமாய் நோக்கங்களுக்கு உள்ள பலன்களை பார்க்கிறோம். பலனை எவ்விதத்திலும் பார்க்கிறோம். பலனை அனுசரித்து அந்தஸ்து இருக்கிறது.

மனிதனுக்கும் கடவுளுக்கும் சம்மந்தப்பட்ட பலன்கள் என்றும், சரீர பிரயோசனமானவைகள் என்றும், விவேகத்தை சம்பூரணம் செய்யப்பட்டவைகள் என்றும், கடவுளிடமிருந்து சூக்ஷமத்தை யடையப்பட்டவைகள் என்றும் பலவகை பலன்கள் உண்டு.

உலகத்தில் கெட்டவைகள் உள. இவைகள் கெட்ட பலன்கள். கெடுதியானதுக்கு கெடுதிசெய்யும் பலனுயிருக்கிறது. பகையை நீக்குவதால் உபயோகமுமா யிருக்கிறது. இவைகளை கடவுள் உற்பத்தி செய்யவில்லை. சூரியன் உற்பத்தி செய்ததுமல்ல. ஆனால் நரகத்திலிருந்து வந்தவைகள்.

மனிதன் சம்மந்தப்பட்டவரையில் இந்த சித்தாந்தத்தை கவனிப்போம். அயலானுக்கும், ஒருவன் தேசத்துக்கும், கடவுள் ராஜ்ஜியத்துக்கும் செய்யும் வேலையும் பிரயோசனமானது. தேவர்கள் வாழ்வு பலன் நிறைந்தது. எல்லா அறிவுக்கும் பலன் முடிவாயிருக்கவேண்டும். மற்றவர்களுக்காக நாம் ஜீவிப்பது ஒரு பலன். உபயோகத்தின் சாரம் பொதுநன்மை. சூக்ஷும கருத்தில் பலன் அயலான். கடவுளின் அன்பு பொருட்டு செய்வது பிரயோசனமானது. தனக்காக செய்வது பலன் அற்றது.

PRINTED AT THE G. R. C. PRESS, MADRAS.—10-'21—350.

விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் அரக்கோணத்திலிருக்கும் "நியு ரிபார்மர்" பத்திராதிபர் D. கோபால செட்டியாருக்கு எழுதவும்.

விலை அணா 8.

மேல்கண்டவரிடம் அவர்செய்த அடியில் கண்ட புத்தகங்களும் அகப்படும்.

1. ஆதி திராவிடர் பூர்வசரித்திரம்	...	விலை அணா	5
2. தமிழர் சரித்திரம்	... ...	,, ,,	1
3. கவுன்ட்லியோ டால் ஸ்டாய் சரித்திரம்.		,, ,,	3